# உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 111

சுடர் : கதிர் : ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 01 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் 2051


## சந்நிதி முருகன் தேர் இன்று

யாழ்ப்பாணம், செப்.1

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. கொரோனாத் தொற்றுத் தடுப்புச் சுகாதார நடைமு

16

# 19 க்கு அடியோடு முடிவு கட்டுவோம்!



## மஹிந்த சூளுரை

கொழும்பு, செப்.1

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்கத்தின் பிரகாரம் அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை முழுமையாக இல்லாதொழிப்போம்.

18




"சொந்தக் காசில சிலவழிக்கிற தெண்டாத்தானே யோசிக்க வேணும்..வரிப்பணத்தை வாரியிறைக்கிறது வழமை தானே பாருங்கோ"

## இடமளியோம்



கொழும்பு, செப்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் தடங்கலாக உள்ள சில விடயங்களை எமது அனுமதியுடன் திருத்தம் செய்து

18

## இல்லையேல்...

### இலங்கை நாசமாகும்



கொழும்பு, செப்.1

கடந்த நல்லாட்சியில் எத்தனையோ தியாகங்களுக்கு மத்தியில்தான் அரசமைப்பின் 19ஆவது திருத்

18

### ராஜபக்ச யுகம்தான்



கொழும்பு, செப்.1

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்பட்டால் இலங்கை ராஜபக்ச யுகமாகவே மாறும். இந்தக் கொடூர நிலைமைக்கு நாட்டை

18

### ஜனநாயகம் சாகும்



கொழும்பு, செப்.1

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான புதிய அரசு கைவைக்க வேண்டிய அவசிய

16

### சர்வாதிகாரம் ஓங்கும்



கொழும்பு, செப்.

நாட்டில் சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டவே அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொ

18

# வரிப்பணத்தை கரியாக்கும் யாழ். மாவட்டச் செயலகம்!

- 20 லட்சம் ரூபாவில் அங்கஜனுக்கு அறை
- 700 பேர் இன்றைய திறப்பு விழாவுக்கு அழைப்பு
- 85 ஆயிரம் ரூபாவுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு
- கொரோனா கட்டுப்பாட்டை மீறி நிகழ்வு
- மற்றொரு இணைத் தலைவரான ஆளுநர் பங்கேற்கார்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 1

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அலுவலகம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது என மாவட்டச் செயலர் க.மகேசன் அறிவித்துள்ளார். இந்த நிகழ்வுக்காகவும், ஒருங்கிணைப்புக்குழுவின் அலுவலகம் அமைப்பதற்காகவும் சுமார் 21 லட்சம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. கொழும்பு அரசிடமிருந்து எந்தவொரு ஒதுக்கீடுகளும், அனுமதிகளும் வழங்கப்படாத நிலையிலேயே இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

16

## இன்றைய திறப்பு விழாவுக்கு 29ஆம் திகதியிட்டுக் கடிதம்!

யாழ்ப்பாணம், செப். 1

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளதாகவும், அந்த நிகழ்வில் பங்கேற்குமாறு அரச

16



## அமைச்சர்களுடன் இணைந்து பணியாற்றுங்கள்

*ஜனாதிபதி பணிப்பு*

கொழும்பு, செப். 1

மாவட்டங்களுக்கு ஒருங்கிணைப்பு 'இணைத்' தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் அந்தந்த மாவட்டங்களின் அமைச்

18

## அங்கஜனுக்கு மறைமுகமாக சூடு வைத்த பசில் ராஜபக்ச

கொழும்பு, செப். 1

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு 'இணைத்' தலைவர் அங்கஜன் இராமநாதனுக்கு, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மறைமுகமாகச் சூடு வைத்துள்ளார். இலங்கையில் ஒவ்வொரு மாவட்டங்க

18


## விக்கி மீது பாய்கிறது நவ சிங்கள ராவய!

கொழும்பு, செப்.1

புலிகளின் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின்

18

## பிரணாப் காலமானார்



புதுடில்லி, செப்.1

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவரும், அந்த நாட்டுக் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான பிரணாப் முகர்ஜி உடல்ந

18

## கணவரால் தீயிடப்பட்ட இளம்பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.1

தீக்காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இளம் குடும்பப் பெண் ஒருவர் 27 நாள்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். அவருக்குத் தீ வைத்த குற்றச்சாட்டில்,

16


செலான் வங்கியிடமிருந்து

உங்கள் தங்கப் பவுனின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ.66,000/-

0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

011 200 88 88

செலான் வங்கி

# அமைச்சரவைக்கு நாளை வருகிறது 20

## பட்ஜட்டுக்கு முன்னர் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிப்பு

கொழும்பு, செப்.1

**அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டவரைவு நாளை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது.**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன அரசின் வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதன்போதே நீதி அமைச்சர் அலி சப்ரியால் '20' சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் அமைச்சர்களின் கருத்துகளைப் பெறுவதற்கு ஒருவாரம் அவகாசம் வழங்கப்படலாம் எனவும் அவ்வாறு இல்லா விட்டால் நாளையே கலந்துரையாடி 20க்கு அமைச்சரவை அனுமதி வழங்கக்கூடும் எனவும் அறியமுடிகின்றது.**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கும், சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைப்பதற்கும், ஜனநாயகக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கும் கடந்த ஆட்சியின்போது 19ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும், அதிலுள்ள சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளிவைத்து ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரங்களை வழங்கும் வகையிலேயே 20 ஆவது திருத்தச்சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ளது என கூறப்படுகின்றது. உயர்நியமனங்களை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படலாம் எனவும், அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி வகிக்கலாம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படலாம் எனவும் அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனினும், ஜனாதிபதியின் பதவிக்காலம், போட்டியிடும் தடவைகள் ஆகியவற்றில் மாற்றம் வராது எனவும் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். அதேவேளை 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு முன்னர் 20ஆவது திருத்தச்சட்ட மூலம் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ம-44)



## சந்திரசேகர பிள்ளையார் ஆலய விக்கிரகத்தில் நீர்!

யாழ்ப்பாணம், செப்.1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற விநாயகர் ஆலயமாக விளங்கும் யாழ்ப்பாணம் நல்லூர் சந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் விக்கிரகங்களின் வாயில் இருந்து தண்ணீர் போன்ற திரவம் நேற்றுமுன்தினம் சுரந்தமை அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆலயத்தின் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்ற நிலையில் மூலஸ்தான பிள்ளையார் மற்றும் பரிவார மூர்த்திகளின் விக்கிரகங்கள் கருவூலத்திலிருந்து பாலஸ்தாபன மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டு பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. சந்தானகோபாலர், நாகதம்பிரான், வைரவர் போன்ற விக்கிரகங்களில் இருந்தே நீர் போன்ற திரவம் வடிந்தது. அதை அறிந்த பெருமளவான பொதுமக்கள் ஆலயத்துக்குச் சென்று நீர் வடியும் விக்கிரகங்களை பார்வையிட்டு வணங்கிச் சென்றனர். (ம-20)

## தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் நினைவுதினம் நாளை

யாழ்ப்பாணம், செப். 1

தமிழ்த் தலைவர்களான வி. தர்மலிங்கம், மு.ஆலாலசுந்தரம் ஆகியோரின் 34ஆவது வருட நினைவு தினம் நாளை புதன்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக் காரியாலயத்தில் இது நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## தலதா இணையத்தளம் மீது இரண்டாவது சைபர் தாக்கு

கொழும்பு, பெப். 1

கண்டி தலதா மாளிகையின் உத்தியோகபூர்வ இணைத்தளம் மீது நேற்று இரண்டாவது தடவையாகவும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனை வழமைக்குக் கொண்டுவந்ததன் பின்னர் நேற்றுப் பிற்பகல் மீண்டும் சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தலதா மாளிகையின் தியவடன நிலமே தெரிவித்தார்.

இதனை வழமைக்குக் கொண்டு வருவதற்கான செயற்பாடுகளை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மேற்கொண்டது என்று தெரிவித்தார். (து)

## பாதுகாப்பு அங்கி அணியாத மீனவருக்கு ரூ.25,000 தண்டம்

யாழ்ப்பாணம், செப்.1

பருத்தித்துறை கடற்பரப்பில் பாதுகாப்பு அங்கி அணியாது படகில் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் மீனவர்கள் இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் தாக்கல் செய்த வழக்கில், மீனவர்கள் இருவரும் தம்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து, பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி காயத்திரி சைலவன் தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

பருத்தித்துறை கடற்பரப்பில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், படகு ஒன்றில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவரை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்தனர். அந்தப் படகில் அனைத்து வசதிகளும் இருந்த போதும் மீனவர்கள் இருவரும் பாதுகாப்பு அங்கி அணியவில்லை என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

மீனவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். மீனவர்கள் இருவருக்கும் பாதுகாப்பு அங்கி அணியாமல் தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மீனவர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்றுரைத்தனர். அதனடிப்படையில் மீனவர்கள் இருவரையும் தலா 25 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-26)

## ஊடகவியலாளர் சத்துரங்க கைது

கொழும்பு, செப்.1

இலங்கை இணையத்தள ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவரான சத்துரங்க டி சில்வா குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்ற விசாரணை தொடர்பிலான செய்தியொன்றை விசாரணைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் வெளியிட்ட குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளரின் மடிக்கணினியும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## ஆளுநர்கள் இருவர் பதவியேற்பு

கொழும்பு, செப்.1

இரு மாகாணங்களுக்கான ஆளுநர்கள் நேற்றுத் திங்கட்கிழமை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. ஊவா மாகாண ஆளுநராக ஏ.ஜே.எம்.முஸம்மிலும், வடமேல் மாகாண ஆளுநராக ராஜ கொல்லுரேவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

முன்னதாக வடமேல் மாகாண ஆளுநராக ஏ.ஜே.எம்.முஸம்மிலும் ஊவா மாகாண ஆளுநராக ராஜ கொல்லுரேயும் பதவி வகித்திருந்தனர். (எ)



## நாகர்கோவிலில் ரூ.40 லட்சத்தில் அமைக்கப்பட்டது சனசமூக நிலையம்

கரணவாய், செப். 1

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நாகர்கோவில் மேற்கில் 40 லட்சம் ரூபா செலவில் 'குருகுலம்' சனசமூக நிலையம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன் திறப்பு விழா மிகவிரைவில் இடம்பெவுள்ள நிலையில் அதன் வீதியைச் செப்பனிடும் பணி தற்போது பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்று வருகின்றது. (கு-108)

யாழ்.பல்கலையின்

# கலைப்பீட 470 மாணவருக்கும் வழங்கப்படுகிறது 'ஸ்ரேற்மன்ற்'

பட்டதாரி நியமனத்தில் உள்வாங்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், செப். 1
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 2013/ 2014 கல்வியாண்டின் இறுதி யாண்டுப் பரீட்சைக்குத் தோற்றிய கலைப்பீட மாணவர்கள் 470 க்கும் மேற்பட்டவர்களுக்குபெறு பேற்று பட்டதாரி நிலையி யல் கூற்று (ஸ்ரேற்மன்ற்) சான்றிதழ் நேற்றுத் தொடக்கம் பல்கலைக்க ழகத்தால் சகல மாணவர் களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

பட்டதாரிநிலையியல் கூற்று தாமதத்தால் புதிய அரசின் அரச வேலை வாய்ப்பை பட்டதாரிகள் இழக்கும் சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஒரே கல்வி யாண்டில் வணிக முகா மைத்துவபீடம் இறுதி யாண்டு மாணவர்க ளுக்கு உரிய காலத்தில் பரீட்சை நடத்தி உரிய ஸ்ரேற்மென்ற்றை உரிய நேரத்தில் வழங்கியதன் பிரகாரம் 50 ஆயிரம் பட்டதாரிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே நியமனம் பெற்றுள்ள னர்.

அதேகல்வியாண்டு கலைப்பீட இறுதியாண்டு மாணவர்களின் பட்டதாரி நிலையியல் கூற்று (ஸ்ரேற்மன்ற்) வழங்க லில் செனட் குழு தாமத் தால் 470 க்கும் மேற் பட்ட மாணவர்கள் பட்ட தாரி வேலைவாய்ப்பை இழக்கும் நிலையேற்பட்டி ருந்தது என்று முன்னர் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு-50)

# எடுக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியே தீருவேன்!

## முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன் என்று தெரிவிக்கின்றார் ஜனாதிபதி கோத்தாபய



**கொழும்பு, செப். 1**
**முன்வைத்த காலை பின்வைக்காது, எடுத்த தீர்மானங்களை நிலையான கொள்கையிலிருந்து செயற்படுத்தி வாழ்க்கைச் செலவை குறைப்பேன் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்ச தெரிவித்தார்.**

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழுவின் முத லாவது கூட்டம் ஜனாதிபதி அலுவல கத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

உள்நாட்டு விவசாயம் மற்றும் விவ சாயிகளின் வாழ்க்கையை கட்டியெ ழுப்புவதற்காக எடுக்கப்பட்ட தீர்மா னத்தின் காரணமாக மஞ்சள் உள் ளிட்ட ஒரு சில நுகர்வுப் பொருள்க ளின் விலைகள் உயர்ந்துள்ளன. விலையைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு மஞ்சள் மற்றும் ஏனைய பொருள்களை இறக்குமதி செய்வதால் எந்தவொரு காலத்திலும் எதிர்பார்த்த இலக்கை நோக்கிச் செல்ல முடியாது என்று அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியமான சில பொருள்க ளின் விலை உயர்வடைந்துள்ள மையால் நகர மத்திய தரப்பினரின் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

40 வீதமான கிராமிய விவசாயிகள் நிலையான மற்றும் போதியளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனில், தமது விளைச்சலுக்கு உயர்ந்த விலை மற்றும் நிலையான சந்தை வாய்ப்பு உள்நாட்டில் இருக்கின்றது என்ற நம்பிக்கையை உறுதிசெய்ய வேண்டும்.

அந்நியச்செலாவணி விகிதங்களை கட்டுப்படுத்துவதற்கும் உயர் கடன் சுமையிலிருந்து விடுபடுவதற்கும் இறக்குமதியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி குறிப் பிட்டார். இந்தியா மற்றும் அமெ ரிக்கா போன்ற நாடுகளும் கொவிட் நோய்த் தொற்றால் இறக்குமதியை கட்டுப்படுத்தியுள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வாரத்துக்கு ஒரு தடவை சந்தை நிலைமைகள் தொடர்பாக தனக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதி அதிகா ரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கௌப்பி, உழுந்து, நிலக்கடலை, எள்ளு, குரக்கன் மற்றும் வெங்காய பயிர்ச் செய்கை வெற்றி கண்டுள் ளன. எனவே, எதிர்காலத்தில் அவற்றை இறக்குமதி செய்ய அவ சியமில்லை என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (கு)

# சூறாவளியால் 30 வீடுகள் திருமலையில் பாதிப்பு

திருகோணமலை, செப். 1
திருகோணமலை மாவட்டத்தில் நேற்று வீசிய மினி சூறாவளியால் 30க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதிய ளவில் சேதமடைந்துள்ளன என்று திருகோண மலை மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உத விப்பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித் தார்.

'சைக்லோன்' என்று அழைக்கப்படுகின்ற மினி சூறாவளியால் மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ, அத்தாபெந்திவெவ கிராமங்களில் 18 வீடுகள் பகுதி அளவில் சேதம டைந்துள்ளன. கிண்ணியா பிரதேசத்தில் ஐந்துக் கும் மேற்பட்ட வீடுகளும் கந்தளாய் பிரதேசத்தில் சில வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன

# மூலதன நிதியில் உறுப்பினர்களுக்கு தலா 5 25,000 ரூபாவுக்குரிய திட்டங்கள்

## சமர்ப்பிக்குமாறு சபை உறுப்பினர்களுக்கு பணிப்பு

கொடிகாமம், செப். 1
2021ஆம் ஆண்டில் சாவகச்சேரி பிரதேச சபை ஆளுகைக்கு உட் பட்ட பகுதியில், மூலதன நிதியிலிருந்து ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது. அதற்கான வேலைத்திட் டங்களை முன்வைக்கு மாறு தவிசாளர் கோரி யுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக் கான பாதீடு தயாரித்தல் மற்றும் அதில் உள்ளடக் கப்பட வேண்டிய மூல தன வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரை யாடல் சாவகச்சேரி பிர தேசசபையின் சபாமண்ட பத்தில் தவிசாளர் க.வாம தேவன் தலைமையில் நேற்று நடைபெற்றது. தன்போதே தவிசாளர் இதைத் தெரிவித்தார்.

சபையின் 31உறுப்பினர் களுக்குமாக மொத்தம் 16.275 மில்லியன் ரூபா வுக்கான வேலைத்திட்டங் கள் ஒதுக்கப்படவுள்ளன. வேலைத் திட்டங்களை இரண்டாவது வரவு செல வுத் திட்ட கலந்துரையாட லுக்கு முன்னர் சபைக்குச் சமர்ப்பிக்குமாறும் தவிசா ளர் உறுப்பினர்களிம் வலி யுறுத்தினார். (கு-159)

# ஆசிரிய விடுமுறை நாள்களை குறைக்க கிழக்கில் சுற்றறிக்கை

## சட்டவிரோதம் என அறிவிக்குமாறு மத்திய கல்வி அமைச்சிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, செப். 1
ஆசிரியர்களின் வருடாந்த விடு முறை நாள்களை கட்டுப்படுத் தும் முகமாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, மாகாண கல் வித் திணைக்களம் மற்றும் பல் முனை வலயக் கல்வி அலுவல கத்தால் வெளியிடப்பட்ட சுற்ற றிக்கை சட்டவிரோதம் என அறி விக்குமாறு கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

'நீதிக்கான மையம்' அமைப்பு இவ்வாறு கோரிக்கை விடுத் துள்ளது.

மேற்படி சுற்றறிக்கை பின்வரும் காரணங்களுக்காக சட்டவிரோ தம் என அறிவிக்குமாறு அது கோரியுள்ளது.


*தீவக ரீதியில் கல்விக்குப் பொறுப்பான மத்திய அமைச்சு விடுமுறை தொடர்பாக மௌனம் காக்கும்போது மாகாண கல்வி அமைச்சு விடுமுறைகளைக் கட் டுப்படுத்தும் முகமாக சுற்ற றிக்கை வெளியிட்டது. இது மத் திய கல்வி அமைச்சின் அதிகா ரத்திற்கு சவாலாக அமைகிறது.

*அரச ஊழியருக்கான விடு முறை நியதிச் சட்டத்தால் உரு வாக்கப்பட்ட ஓர் அம்சம் அது. எனவே துணைச் சட்டங்களால் அதாவது சுற்றறிக்கைகளால் அதை மட்டுப்படுத்த முடியாது.

*பொதுவாக சட்டங்கள் பின் னோக்கி ஆளும் தன்மையைக் கொண்டிருக்கலாகாது. இந்த சுற்றறிக்கை பின்னோக்கி ஆளும் இயல்பைக் கொண்டுள் ளது.

*ஏனைய மாகாணங்களில் ஆசி ரியர்கள் வருடாந்த விடுமுறை எவ்விதமான மட்டுப்பாடுகளும் இல்லாமல் பெற்றுக்கொள்ளும் போது, கிழக்கு மாகாண ஆசிரி யர்கள் மட்டும் அந்த உரி மையை இழப்பது அடிப்படை மனித உரிமை மீறல்.

*குறித்த சுற்றறிக்கை தேசிய பாட சாலைகளுக்கும் அனுப்பப்பட் டுள்ளது. தேசிய பாடசாலைக்கு ஆசிரியர் விடுமுறை தொடர் பான வழிகாட்டுதலை மேற் கொள்ள மாகாண கல்வி திணைக்களத்துக்கு அதிகாரம் உள்ளதா? என்ற விடயமும் தீர்க் கப்பட வேண்டும். என்று குறிப் பிட்டுள்ளது. (கு)




கைதடி இணுங்கித் தோட்டம் கந்த சுவாமி கோவில் பெருந்திருவிழா வின் சப்பரத் திருவிழா நேற்று நடைபெற்றது. (கு)

# இனம், மொழியைக் கொண்ட கட்சிகளை நிராகரியுங்கள்

## அரசைக் கோருகிறார் பேராயர்

கொழும்பு, செப். 1

**இனம் மற்றும் மொழியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் தடை செய்ய வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார். ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்பான பிரதான சூத்திரதாரிகளை அரசாங்கம் தண்டிக்காவிட்டால், அரசாங்கத்துக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தத் தவற மாட்டோம் எனவும் அவர் தெரிவித்தார்.**



தேவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

அன்று பிரித்தானிய ஆட்சிக் காலத்தில், துன்பங்களுக்கு உள்ளான எம் மக்களை அதிலிருந்து மீட்க, அனைத்து மக்களும் இனம் கடந்து, மொழி கடந்து ஒன்றிணைந்து போராடினார்கள். ஆனால், இன்று நாம் எந்த நிலைமையில் உள்ளோம்? யாருடைய மொழி உலகிலேயே பழைய மொழி என விவாதித்துக் கொண்டு, காலத்தையும் நேரத்தையும் வீணாக்கிக்கொண்டு வருகிறோம். நாம் இன்னும் கண்ணைத் திறந்து, அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதைப் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். இதுவரை ஈஸ்டர் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி யார் என்ற உண்மை தெரியவில்லை. இன்று ஆணைக்குழுவின் ஊடாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இன்று நடக்கும் விசாரணைகளின் ஊடாக தமது கடமையை நிறைவேற்றத் தவறிய அரசியல்வாதி மற்றும் அதிகாரி யார் என்பதைக் கண்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இருந்தாலும் இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்டவர்கள், இதற்குப் பணம் வழங்கியவர்கள், கட்டளையிட்டவர்கள் யார் என்பதை இன்னமும் இவர்கள் கண்டறியவில்லை. ஜனாதிபதி ஆணைக்குழு இவர்கள் தொடர்பாக விரைவில் கண்டறிய வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரிகளை மறைக்கும் முயற்சியில் எந்தவொரு அரசாங்கமேனும் ஈடுபட்டால், அந்த அரசாங்கத்திற்கு நாம் எமது எதிர்ப்பை நிச்சயமாக வெளிப்படுத்துவோம் - என்றார். (ப-இ)

# தடைப்பட்டியலில் சீனா ஒப்பந்தகாரர்

## ஆசிய நாடுகளுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருத்து

கொழும்பு, செப்.1

சர்ச்சைக்குரிய தென்சீனக் கடலில் சீனாவின் கட்டுமானப்பணிகளில் ஈடுபட்டுள்ள சீன ஒப்பந்தகாரரை அமெரிக்கா கடந்த வாரம் தடைப்பட்டியலில் சேர்த்திருப்பது ஆசிய நாடுகள் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இராஜதந்திர பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தென் சீனா மோர்னிங் போஸ்ட் பத்திரிகையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் 10.5 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் கிழக்குக் கடற்கரை ரயில் இணைப்பு, இலங்கையில் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் போர்ட் சிட்டி, பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு வெளியே ஒரு புதிய 10 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டிலான விமான நிலையம் ஆகியவை சீனா கொம்யூனிகேஷன்ஸ் கொன்ஸ்ட்ரக்ஷன் கம்பனியால் (சி.சி.சி.சி) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலையில் அந்த நிறுவனத்தின் ஒப்பந்தகாரர்களை அமெரிக்க தடைப்பட்டியலில் சேர்ததால், அது ஆசிய நாடுகள் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

# உறவுகளின் போராட்டத்தை அலட்சியப்படுத்தக் கூடாது

## காவிந்த ஜயவர்தன எம்.பி. சீற்றம்

கொழும்பு, செப்.1

வலிந்து காணாமலாக்கப்பட்டோரது உறவுகள் முன்னெடுக்கும் போராட்டத்தை அரசாங்கம் அலட்சியப்படுத்துவது. போரால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை அவமதிப்பதாகவே கருதப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சர்வதேச காணாமல்போனோர் தினத்தை முன்னிட்டு காணாமல்போனோரது உறவுகள் முன்னெடுத்த போராட்டங்களை அரசாங்கம் அலட்சியப்படுத்துவது எதிர்பார்க்கக் கூடியது. ஆனால் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தாமல் இருப்பது கவலைக்குரியது. வலிந்து காணாமலாக்கபட்டோர் தொடர்பில் அரசாங்கம் பொறுப்பற்ற விதமாகவே செயற்படுகிறது. 30 வருட கால போரில் காணாமல்போனோர் பிற நாட்டவர்கள் அல்லர். அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். காணாமல் போனோர் அலுவலக விவகாரத்தை பொதுஜன பெரமுனவினர் தங்களின் இனவாத அரசியலுக்கு முழுமையாகப் பயன்படுத்தி பெரும்பான்மை மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவித்துப் பயன் பெற்றுக் கொண்டார்கள்- என்றார். (ப-இ)

# சாவுத் தண்டனை கைதி எம்.பியாகவே முடியாது

கொழும்பு, செப்.1

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சோகா மல்லி என்ற பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபர் திணைக்களம் அனுப்பியுள்ள கடிதத்திற்கு அமைவாக நீதி அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவிப்பை நீதி அமைச்சு நாடாளுமன்றச் செயலாளருக்கு அனுப்பியுள்ளது என்று தெரியவருகிறது.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது நடந்த கொலைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் பிரேமலால் ஜயசேகரவுக்கு அண்மையில் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. பிரேமலால் ஜயசேகர கடந்த பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். (ப-இ)

# தலைவருக்கே எம்.பி. ஆசனம்

## ஐ.தே.க உயர்பீடம் முடிவு

கொழும்பு, செப். 1

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்படவுள்ளவருக்கே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க அக்கட்சி உயர்பீடம் தீர்மானித்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூடுகின்றது. இதன்போது புதிய தலைவர் மற்றும் தேசியப்பட்டியல் பதவிகளுக்குப் பொருத்தமான ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கரு ஜயசூரிய, ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன, ருவன் விஜேவர்தன, அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட எட்டுப் பேர் கட்சித் தலைவர் பதவிக்காகத் தற்போது களத்தில் இறங்கியுள்ளார்கள். (ப-இ)

# கோத்தாவுடன் உரையாடிய அமெ. பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, செப். 1

அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் மார்க் டி. எஸ்பர், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட் 19 தொற்று நோயை வெற்றிகரமாகக் கையாண்டமை மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியடைந்தமை ஆகியவற்றுக்கு ஜனாதிபதி கோத்தாபயவுக்கு அவர் இதன்போது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். மேலும் இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் குறித்த தொடர்ச்சியான முன்னேற்றத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். பொதுவான இருதரப்பு பாதுகாப்பு முன்னுரிமைகளை மதிப்பாய்வு செய்து, இராணுவ தொழில்மயமாக்கல், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இந்த உரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ப-இ)

# செய்தி அறிக்கை; இருவருக்கு விருது

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து செய்தியறிக்கை அளித்தமைக்காக இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் இருவருக்கு ஆசியாவின் பதிப்பாளர் சங்கம் மதிப்புமிக்க சர்வதேச விருதுகளை வழங்கியுள்ளது.

ஷிஹார் அனீஸ் மற்றும் ரங்க சிரிலால் ஆகிய இருவருமே இவ்வாறு சோபாவின் மதிப்புமிக்க சர்வதேச விருதுகளை வென்றுள்ளனர். இவர்கள் இருவரும் ஊடகவியலாளர்கள் குழுவுடன் சேர்ந்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ரோய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு விரைவாக உண்மைத் தகவல்களைப் பகிர்ந்து கொண்டதில் சிறந்து விளங்கியமையை அடிப்படையாகக் கொண்டே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (ப)

# அரசியல் கட்சிகள் பதிவு; நேர்முகத் தேர்வு நிறைவு

கொழும்பு, செப். 1

அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான முதற்கட்ட நேர்முகத் தேர்வுகள் கடந்த 29ஆம் திகதி நிறைவடைந்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்திற்காக 150 க்கும் அதிகமான அரசியல் கட்சிகள் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ளன. இதில் 40 கட்சிகளின் விண்ணப்பங்கள் முறையாக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் முதற்கட்டத்திலேயே நிரா கரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட நேர்முகப்பரீட்சை விரைவில் நடைபெறும் என ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ப-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## செருப்புக்காக காலை வெட்டுதல்

சிங்கராஜ வனத்தை ஊடறுத்து அமைக்கப்பட்டுவரும் பெருவீதியை இன்னும் மூன்று மாதங்களுக்குள் விரைவாகப் பூர்த்தி செய்யுமாறு, வீதியமைப்பு பணிகள் நடைபெறும் இடத்துக்கு நேரடியாகச் சென்ற ஜனாதிபதி கோத்தாபய உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவு சூழலியாளர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சிங்கராஜவனம் இலங்கையில் உள்ள மிகப்பெரிய பாதுகாக்கப்பட்ட வனம். மழைக்காட்டு வகையைச் சேர்ந்த சிங்கராஜவனத்தில் இலங்கையில் மட்டுமல்லாது உலகிலேயே அரிதான தாவரங்களும், விலங்குகளும் இருப்பதால் அவற்றுக்கு ஊறு விளைவிக்காமல் இருப்பதற்காகவே அது 1998 ஆம் ஆண்டு உலக இயற்கை மரபுரிமையாக, பாதுகாக்கப்பட்ட வனமாக, யுனெஸ்கோ அமைப்பால் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இப்போதும் கூட, அந்தக் காட்டுப்பகுதிக்கு ஆய்வுக்காகச் செல்வோர், இன்னமும் இயற்கையின் வனப்பும், கட்டமைப்பும் சிதறாதவகையில் சிங்கராஜவனம் பாதுகாக்கப்பட்டுவருவதை அவதானிப்பர். தேவையற்ற மனித நடமாட்டங்கள் விலங்குகளின் வாழ்வியலைச் சீர்குலைத்துவிடும் என்பதால் அங்கு பல பகுதிகளில் மனிதர்கள் உட்புகத் தடையும் உண்டு.

இப்படிக் காடு என்றால் என்ன என்பதற்கான உயிர்த்தன்மையோடு இருக்கும் சிங்கராஜ அயன மண்டலக் காட்டின் அமைதியைக் குழப்பும் வகையில் அண்மைக் காலமாகப் பல நடவடிக்கைகள் நிகழ்ந்துவருகின்றன. கட்டுப்பாடற்றவகையில் சிங்கராஜ வனத்துக்குள் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவதால் காட்டு விலங்குகள் வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்வதாக சில வருடங்களுக்கு முன்னர் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இப்போது என்னடாவென்றால், அந்தக் காட்டை ஊடறுத்து நெலுவ லங்காகம வீதி அமைக்கப்பட்டு வருகின்றது. வலகம்பா மன்னன் காலத்தில் உருவாக்கப்பட்ட லங்காகம கிராம மக்கள் தமது அடிப்படைத் தேவைகளான கல்வி, மருத்துவம் போன்றவற்றைப் பெறுவதற்காக சிங்கராஜவனத்தைச் சுற்றி, சுமார் நான்கரை மணித்தியாலங்களைச் செலவிட்டு, நெலுவ பகுதிக்கு வருகின்றனர். எனவே அவர்களின் வாழ்வியலை இலகுவாக்கவே சிங்கராஜ வனத்தின் ஊடாக வீதி அமைக்கப்பட்டு வருவதாக அரசு அறிவித்துள்ளது. இது கிட்டத்தட்ட செருப்பு அளவில்லை என்பதற்காக காலை வெட்டிய கதைதான்.

லங்காகம மக்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம் போன்றவற்றை அவர்களின் பகுதியிலேயே அமைத்து விட்டால் எதற்காக அவர்கள் நெலுவ பகுதிக்குப் போக வேண்டும்? அரசுக்கு உண்மையாகவே அந்த மக்கள் மீது அக்கறையிருந்தால் அந்தப் பகுதியிலேயே பாடசாலை, மருத்துவமனை என்பவற்றைக் கட்டிக் கொடுத்திருக்கலாமே. இப்படி சுற்றுச்சூழல் சமநிலையைக் குலைத்து, இலங்கையின் அரிய காட்டை அழித்து வீதியை அமைக்க வேண்டிய கட்டாயம் எதுவுமில்லையே. உலகின் இயற்கை மரபுரிமையை இலங்கை அரசு அழிப்பதாக யுனெஸ்கோவும் இந்த விடயத்தில் தலையிட்டிருந்தது. அதனால் வீதியமைப்பு சிலகாலம் ஒத்துவைக்கப்பட்டிருந்தபோதும், இப்போது முன்னரை விட துரிதவேகத்தில் அதனைப் பூர்த்தி செய்யும்படி கோத்தாபய கட்டளையிட்டுள்ளார். ஒரு சர்வதேச அமைப்பு தடுத்தும் கேளாமல், சுற்றுச்சூழலியளாளர்களின் கருத்தையும் மதிக்காமல் இந்த வீதியை அரசு அமைக்கின்றதென்றால் அதன் பின்னால் நிச்சயமாக லங்காகம மக்களின் வாழ்வியல் முன்னேற்றம் மட்டும் காரணமல்ல. அதற்கு அப்பால் ஆதாயம் தரக்கூடிய ஏதோ ஒன்றுக்காகவே இப்படி அரசு அந்த வீதியை அமைத்தே தீருவோமெனப் பிடிவாதமாக நிற்கின்றது.

அபிவிருத்தி என்றாலே ஏற்கனவே இருக்கும் தொன்மங்களை அழிப்பதுவும், காடுகளை ஒழிப்பதுவுமே என்று அரசுக்கு யாரோ தவறாகப் போதித்துவிட்டார்கள் போலும். அதனால்தான் தன் வீட்டுக்கு தானே நெருப்பு வைப்பது போல, இலங்கையின் மதிப்புமிக்க சொத்தாக, உலக நாடுகளின் கண்களை உறுத்திக் கொண்டிருந்த சிங்கராஜ வனம் என்ற பொக்கிசத்தை கோத்தாபய அரசு தானே அழிக்கும் முடிவை எடுத்துள்ளது. ஆனால் அரசின் இந்த முடிவுகள் தவறென உறைக்கும்படி இயற்கையால் உணர்த்தப்படும்போது, காலம் வெகுவாகக் கடந்திருக்கும்.

# மன்னாரில் உறவுகள் நேற்றுக் கவனவீர்ப்பு

மன்னார், செப்.1

**காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை மன்னாரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்று கூடி அமைதியான முறையில் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.**



மன்னார் பிரஜைகள் குழுவின் அனுசரணையுடன், மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் காலை 9.30 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்று கூடி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் கலந்துகொண்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் "சர்வதேசமே மௌனம் காப்பது ஏன்?, இலங்கை அரசே உண்மையை மறைக்காதே ஒரு நாள் நிச்சயம் வெளிவரும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, சர்வதேசமே புதிய அரசாங்கத்திடம் நீதியை பெற்றுத்தாருங்கள்" உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நினைவகம் ஒன்றை அமைப்பதற்கு இடம் கோரி கையெழுத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பால் ஜனாதிபதிக்கு எழுதிய மகஜர், போராட்டம் இடம் பெற்ற இடத்துக்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ். குணபாலனிடம் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், மதத்தலைவர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-56)

# விக்னேஸ்வரனுக்கு புனர்வாழ்வளிக்குக!

### *அரசிடம் கோருகிறார் அமரசேகர*

கொழும்பு, செப்.1



தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனை அரசு புனர்வாழ்வுக்குட்படுத்த வேண்டும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர நேற்று தெரிவித்தார்.

விக்னேஸ்வரனின் அண்மைக்கால அறிவிப்புகள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

விக்னேஸ்வரனுக்கு வயதுபோய்விட்டது. சிலவேளை மூளைகூட இயங்காமல் இருக்கலாம். அதன் காரணமாகவே அவர் மாறுபட்ட கோணங்களில் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார். வடக்கில் இருந்து பிரபாகரன் உருவாகியமையால் தமிழ் இளைஞர்களின் வாழ்க்கையே வீணானது. இதேபோன்று தமிழ் இளைஞர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தி அவர்களைத் தவறாக வழிநடத்துவதற்கு முயற்சிக்கின்றார். இது தவறான முன்னுதாரணமாகும்.

தெற்கிலுள்ள இளைஞர்களைப்போல் வடக்கிலுள்ள இளைஞர்களுக்கும் வேலையின்மை உள்ளிட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அவை தீர்க்கப்பட வேண்டும். வருமானம் பெறுவதற்கான வழிமுறைகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அப்போது அனைவரும் சமாதானமாக வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும். எனினும், இளைஞர்களைத் தவறாக வழிநடத்த முயற்சிக்கும் விக்னேஸ்வரனை மறுவாழ்வுக்கு உட்படுத்தவேண்டும். ஏனெனில் அவர் தற்போது தீவிரவாத சிந்தனைகளுக்குள் மூழ்கியிருக்கின்றார்" - என்றார். (ம-44)

# தவறான முடிவெடுத்து ஒருவர் உயிர்மாய்ப்பு!

முல்லைத்தீவு, செப்.1


முல்லைத்தீவு தீர்த்தக்கரை கிராமத்தில் உள்ள பொதுமண்டபத்தில் அதே இடத்தை சேர்ந்த ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். மூன்று பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடைய நபரே தற்கொலை செய்தவராவார். சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-இ)

# உத்தியோகத்தர்களுக்கு நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம் ,செப். 1

வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் கடந்த வருடம் மாகாண முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தரம் III க்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனக் கடிதங்கள், மாகாண பிரதம செயலாளர் செயலகத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்கள் நாளை புதன்கிழமை தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மாகாண அரச திணைக்கள அலுவலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-9)



வவுனியா ஈச்சங்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றது. அரோகரா கோசத்துடன் ஆண்களும், பெண்களுமாக வடம் பிடித்து தேரை இழுத்துச் சென்றனர்.(க-18)

## தென்மராட்சியில் நாளை முன்பள்ளிகள் ஆரம்பம்

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளை நாளை புதன்கிழமை திறப்பதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன.

சுகாதாரப் பகுதியினர் முன்பள்ளிகளில் சுகாதார நலன்கருதி கைகழுவும் வசதி, சமூக இடைவெளி பேணும் வசதி போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்து வருகின்றனர்.

சிறார்களை முன்பள்ளிக்கு அழைத்து வரும் போது கட்டாயம் முகக்கவசம் அணிந்து வர வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நாளை தரம் ஆறு தொடக்கம் 13 வரையான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன எனவும். ஆரம்பப் பிரிவு வகுப்புகள் எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## இன்று தேர்

கொடிகாமம், செப்.1

நாவற்குழி அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை காலை தேர்த்திருவிழாவும், நாளை புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-159)


# புயல் காற்றால் 15 வீடுகள் சேதம்

## முள்ளிவாய்க்காலில் சம்பவம்

**முள்ளிவாய்க்கால், செப்.1**

**முள்ளிவாய்க்கால் மேற்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை மழையுடன் கூடிய புயல் காற்று வீசியதுடன், ஐஸ் கட்டிகளும் கொட்டின என மக்கள் தெரிவித்துள்ளனர்.**

இதனால் பொதுமக்களின் 15 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், முள்ளிவாய்க்கால் மேற்கில் தற்காலிக வீடு ஒன்று முற்று முழுதாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.



வீடுகளின் கூரை ஓடுகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன், மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. வீட்டின் முன்னால் போடப்பட்டிருந்த தகர கொட்டகைகள் தூக்கி வீசப்பட்டுச் சேதமடைந்துள்ளன.

ஐஸ் மழை பெய்ததால் மக்களின் வீடுகளின் கூரைகள் பல சேதமடைந்துள்ளன.

சில வீடுகளில் நின்ற வேப்பமரக்கிளைகள் முறிந்து வீழ்ந்துள்ளமையுடன் வேலிகள் பலவும் சாய்ந்துள்ளன.

சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் விவரங்களை திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-19)

## வீதியின் நடுவே சரியும் மரங்கள்

முல்லைத்தீவு.செப்.1

முல்லைத்தீவு நெடுங்கேணி பிரதான வீதியில் பழமை வாய்ந்த மரங்கள், வீதியின் நடுவே சரிந்து விழும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இதனால் வீதியூடாகப் பயணம் மேற்கொள்ளும் வாகனங்கள், பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன. எனவே பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு, வீதியிலுள்ள ஆபத்தான மரங்களை அகற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தையில் கடந்த வாரம் வீதியோரத்தில் இருந்த மரம் முறிந்து வீழ்ந்தமையால், இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க-222)



## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.1

யாழ்ப்பாணம் கோப்பாய் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் வாராந்தம் நடத்தப்படும் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆலய சண்முக விலாச மண்டபத்தில் மாலை 5.30 மணிக்கு சிவநெறிச்செம்மல் சைவப்புலவர் ச.முகுந்தன் "நாலாயிரம் கண் படைத்திலனே" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஐ)



## குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி.செப்.1

எழு தமிழ் நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை கிளிநொச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஏற்பட்டுள்ள குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இந்தக் குருதிக்கொடை முகாம் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது. மங்கள விளக்கை கரைச்சி பிரதேசசபைத் தவிசாளர் வேழமாலிகிதன், மருத்துவர் எச்.எம்.டி.பண்டார, நற்பணிமன்ற அமைப்பாளர்களான காவலூர் அகிலன், சோபனா, கீர்த்திகன் மற்றும் குகதீஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது. 32 கொடையாளர்கள் குருதித்தானம் செய்தனர். (ஐ)

## இம்முறை வெங்காயம் அதிக விளைச்சல்

வடமராட்சி, செப்.1

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் குடத்தனை அம்பன், செம்பியன்பற்று ஆகிய பகுதிகளில் கோடைகால வெங்காயப் பயிர்ச்செய்கை இம்முறை அதிக விளைச்சலைக் கொடுத்துள்ளது.

இந்தப் பகுதிகளில் புலோலி கரவெட்டி,தம்பசிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் பெருமளவில் கோடைகால வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது வெங்காய அறுவடை இடம்பெற்று வருகிறது. (ஐ-173)

# கழிவு முறையை நீக்கியதால் தரம் பிரிக்கப்படும் மரக்கறிகள்

## உற்பத்தியாளர்கள் கவலை

சாவகச்சேரி.செப்.1

சாவகச்சேரி பொதுச் சந்தையில் உற்பத்தியாளர்களால் கொண்டுவரப்படும் உற்பத்திப் பொருள்களை வியாபாரிகள் தெரிந்து எடுப்பதால், மிகுதியை வீட்டுக்குக் கொண்டு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

சாவகச்சேரி பொதுச்சந்தையில் இதுவரை காலமும் வியாபாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பத்துக் கிலோவுக்கு ஒரு கிலோ கழிவு முறைகள் நகரசபையால் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சந்தைக்கு கொண்டு வரப்படும் உற்பத்திப் பொருள்களை உழவர் சந்தையில் வைத்து, வியாபாரிகள் தரம் பிரிக்கின்றனர். தரமானவற்றை எடுத்துக்கொண்டு சூத்தை, அழுகியது, நசிவடைந்தது போன்றவற்றை நீக்கிவிடுகின்றனர். கழிவாக விடப்படும் இந்த உற்பத்திப் பொருள்களை விற்க முடியாமல். வீடுகளுக்கு திரும்பிக் கொண்டுசெல்ல வேண்டியுள்ளது என உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக வியாபாரிகளிடம் கேட்ட போது; உற்பத்தியாளர்களால் கொண்டு வரப்படும் 50 கிலோ கத்தரிக்காய்களுக்குள் குறைந்தது ஐந்து கிலோவுக்கு மேல் சூத்தை காணப்படும். இதனைப் பொது மக்களுக்கு விற்கமுடியாததால் நுகர்வோரால் கழித்து விடப்படும் சூத்தைக் கத்தரிக்காய்களை கால்நடை வளர்ப்போருக்கு இலவசமாக வழங்குவோம். வெங்காயம் கொண்டு வருவோர் ஒரே மாதிரியான காய்கள் கொண்டு வருவதில்லை. 50 கிலோ மூடைக்குள் குறைந்தது ஐந்து கிலோ சின்ன வெங்காயத்தையும் சேர்த்து கலப்படம் செய்து கொண்டு வருவார்கள் உற்பத்தியாளர்கள் செய்யும் கலப்படத்துக்கு வியாபாரிகளாகிய நாங்கள் நுகர்வோரிடம் திட்டு வாங்க வேண்டியுள்ளது. இதனால் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது பத்துக்கு ஒன்று கழிவு கேட்கின்றோம். உற்பத்தியாளர்கள் சூத்தை,அழுகல், நசிந்த உற்பத்திப் பொருள்களை நீக்கி விட்டு கொண்டுவரும் பட்சத்தில் தரமான பொருளுக்கு கழிவு கொடுக்கும் நிலை எமக்கு ஏற்படாது - என்றனர். (ஐ-9)

### வீதியோரங்களில்

# கழிவுகள் கொட்டுவோரை கண்காணிக்கத் திட்டம்

## வடக்கு ஆளுநர் நடவடிக்கை



**யாழ்ப்பாணம், செப்.1**

**வீதியோரங்களில் கழிவுகள் கொட்டுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அதற்கான அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.**

வடக்கில் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட பொது இடங்களில் அல்லது வீதியோரங்களில் மனிதனுக்குதீங்கு விளைவிக்கக் கூடிய கழிவுகள், திண்மக் கழிவுகள் இரவு வேளைகளிலும், காலை நேரங்களிலும் கொட்டப்படுகின்றன.

இவ்வாறு பொது சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையிலும், மக்களுக்குத் தீராத நோய்களை ஏற்படுத்தும் வகையிலும் நடந்து கொள்வோரை, பொலிஸாரின் உதவியுடன் சட்டத்தின் முன்னிறுத்த பொதுமக்கள் ஒன்றிணைய வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைக்குட்பட்ட வகையில் திண்மக் கழிவுகள் அகற்றும் செயல் முறை கிரமமாக இடம்பெறுவதனை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் கண்காணித்து அறிக்கையிட வேண்டும்.

இதனையும் ஏற்றுக் கொள்ளாது, சட்ட விரோதமாகக் கழிவுகளை வீதியோரங்களில் கொட்டுவோரை விரைந்து இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

இதற்கு ஒன்றிணைந்த கிராம மட்டக் குழுக்களை எதிர்காலத்தில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை விட மேலதிக இடர்பாடுகளை உள்ளூராட்சி சபைகள் எதிர்கொள்ளுமாயின், உடன் அந்தப் பகுதி பொலிஸ் பொறுப்பதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு சென்று நடவடிக்கைக்கு உட்படுத்தலாம் என்று ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார். (க-50)

## பயிலுநராக தெரிவானோர் வரவை உறுதிப்படுத்தவும்

தென்மராட்சி, செப்.1

தொழிலற்ற பட்டதாரிகளுக்கு அரச நிறுவனங்களில் பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை நாளை புதன்கிழமை பிரதேச செயலகத்துக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட பயிலுநர்கள் பிரதேச செயலகத்துக்கு வந்து தமது வரவை உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் அறிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் 309 பட்டதாரிகள் பயிலுநர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## போர் இடம்பெற்ற இடங்களில் அகற்றப்படும் மண் அணைகள்

சாவகச்சேரி, செப்.1

தென்மராட்சி பிரதேசத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் படையினர் நிலைகொண்ட இடங்களில் அமைக்கப்பட்ட மண் அணைகள் அகற்றும் பணிகள் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேர்தலுக்கு முன்னர் மீள் குடியமர்வு அமைச்சால் வழங்கப்பட்ட நிதியில், மண் அணைகள் அப்புறப்படுத்தப்பட்டு, காணிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் எழுதுமட்டுவாழ் வடக்கில் 12 ஏக்கர் காணிகளில் இருந்த மண் அணைகள் துப்புரவு செய்யப்பட்டன. அந்தக் காணிகளில் இந்த வருடம் காலபோக நெற்செய்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் காணிச் சொந்தக்காரர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் எழுதுமட்டுவாழ் நாகர்கோவில் வீதியில் மூன்று கிலோ மீற்றர் நீளத்துக்குக் காணப்பட்ட மண் அணைகள் அப்புறப்படுத்தப்பட்டன.

தனங்களப்பு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பால்மோட்டைப் பகுதியில் 2 கிலோ மீற்றர் நீளத்திலும், துண்டிப் பகுதியில் 2.5 கிலோமீற்றர் நீளத்திலும் காணப்பட்ட நன்னீர் தடுப்பு அணைகளில் சேதமடைந்து காணப்படும் பகுதிகள் புனரமைக்கும் பணிகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க-9)



சாவகச்சேரி நகர் செருக்கல்பதி சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். (ஐ-9)

### கொரோனாப் பெருந்தொற்று

## சந்தேகத்துக்கு உரியவர்கள் இருந்தால் உடன்அறிவியுங்கள்




வவுனியா, செப். 1

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். சந்தேகத்துக்கு இடமான முறையில் எவராவது இருந்தால் உடனடியாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று வவுனியாவில் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

காய்ச்சல், வறட்டு இருமல், சளி,மூச்சுத்திணறல் கொரோனாவுக்கான முக்கிய அறிகுறிகள். இவை இருக்கும் நபர்களிடம் ஏனையவர்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். அத்துடன் சந்தேகத்திற்கிடமான நபர்களைத் தங்கவைத்தல், பாதுகாப்பளித்தல், போக்குவரத்துக்காக உதவியளித்தல், மறைந்திருப்பதற்காக உதவி புரிதல் செய்யலாகா. எனவே மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக தகவல் கிடைத்தால் அல்லது அறியக் கிடைத்தால் பொலிஸாருக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும் என்று அந்த சுவரொட்டிகளில் குறிப்பி டப்பட்டுள்ளது. (ம-18)



## நகையைத் தொலைத்தவர்கள் பொலிஸாரைத் தொடர்பு கொள்க

சாவகச்சேரி, செப் 1.

மறவன்புலவு பாடசாலை மாணவியால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட தங்க நகைகளைத் தொலைத்தவர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பிய 12 வயது மாணவி மறவன்புலவு மேற்கில் உள்ள ஒழுங்கையில் தங்க நகைகள் கொண்ட பெட்டியைக் கண்டுள்ளார்.

அதனை எடுத்துப்பார்த்தபோது ஒரு தொகை தங்க நகைகள் இருக்கின்றமையைக் கண்டுள்ளார். மாணவி தனியே வந்ததால் அவ்விடத்தில் நகைப்பெட்டியைப் புதைத்துவிட்டு வீட்டுக்குச் சென்று பெற்றோரிடம் தெரிவித்தார்.

பெற்றோர் அந்த இடத்துக்கு வந்து நகைப்பெட்டியை மீட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மாணவி மற்றும் அவரது பெற்றோரின் செயல் குறித்து பொலிஸார் பாராட்டுத் தெரிவித்ததுடன் நகைகளைத் தொலைத்தவர்கள் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர். (ஐ-9)

## பழுதடைந்த நிலையில் வீதி மின்விளக்குகள்

### மக்கள் குற்றச்சாட்டு

மானிப்பாய், செப்.1

கடந்த மூன்று ஆண்டுகளில், வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் உள்ள சுமார் 600 க்கும் மேற்பட்ட வீதிகளுக்கு, 2 ஆயிரத்து 185 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. எனினும் சில மாதங்களில் அநேகமான மின் விளக்குகள் பழுதடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தரம் குறைந்த மின் விளக்குகள் பொருத்தப்பட்டமையே இந்த நிலைக்குக் காரணம் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் என 4 உப அலுவலகங்களைக் கொண்ட வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. 17 வட்டாரங்களை கொண்ட இந்தப் பிரதேசத்தில் விகிதாசார முறையில் இடம்பெற்ற தேர்தலால் 28 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன், சபை நிதியையும் சேர்த்து வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

கடந்த 2017 ஆம் ஆண்டு 600 மின் விளக்குகளும், 2018 ஆம் ஆண்டு 435 மின் விளக்குகளும், 2019 ஆம் ஆண்டு ஆயிரத்து 150 மின் விளக்குகளும் பொருத்தப்பட்டன. 2 ஆயிரத்து 185 மின் விளக்குகள் பொருத்துவதற்கு இலங்கை மின்சார சபைக்கு 24 லட்சத்து 93 ஆயிரத்து 500 ரூபா கூலியாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-115)

# சிறந்த ஒருவர் தலைவரானால் ஐ.தே. கவுடன் கூட்டணி உறுதி

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, செப். 1

**ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக சிறந்த ஒருவர் தெரிவுச் செய்யப்பட்டால். அவருடன் கூட்டணி அமைத்துச் செயற்படுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுத் தேர்தல் முடிவுகளுக்கமைய மக்கள் எமக்கு ஒரு ஆணையை வழங்கியுள்ளனர். அதன்படி செயற்படுவதற்கே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தீர்மானித்துள்ளார். அதனையே நாங்களும் விரும்புகின்றோம். எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியினூடாகவே நாங்கள் போட்டியிடுவோம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பை யாருக்குப் பெற்றுக்கொடுப்பது என்பது தொடர்பில் கட்சிக்குள் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படுகின்றது. இதற்காக கட்சியில் எஞ்சியிருக்கும் பலரது பெயர்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பை யாருக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது தொடர்பில் அக்கட்சியின் உறுப்பினர்களே முடிவுசெய்ய வேண்டும். நாங்கள் அந்த விடயங்கள் தொடர்பில் அக்கறை செலுத்த விரும்பவில்லை. ஐ.தே.கவின் தலைமைத்துவப் பொறுப்பு யாருக்கு கிடைத்தாலும். அவர் மோசடிக் குற்றச்சாட்டுகளுக்குத் துணைபோகாத சிறந்த நபராக இருப்பாராயின் அவருடன் கூட்டணி அமைத்துச் செயற்படுவோம்.

பொதுத் தேர்தல் முடிவு களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி வெறுமனே சின்னத்தை யும், பெயரையும் மாத்திரம் கொண்ட ஒரு கட்சியாகவே காணப்படுகின்றது. அதனால், அந்தக் கட்சியில் எஞ்சியிருக்கும் சிறந்த நபர்களை ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துச் செயற்படுமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார். (ப)

# 19ஐ நீக்காமலேயே புதிய அரசமைப்பு

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

கொழும்பு,செப். 1

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நீக்காமல் ஒரு நாடு ஒரு சட்டம் என்ற நிலைப்பாட்டுக்குள் அனைத்து இன மக்களும் ஒன்றுபடும் புதிய அரசமைப்பை உருவாக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அத்துடன் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இனங்களுக்கும், மாகாணங்களுக்கும் வலுச் சேர்க்கும் விதத்தில் விடயங்கள் ஒருபோதும் உள்ளடக்கப்படமாட்டா எனவும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். பிலியந்தல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ப)



# பெரும் கடலரிப்பால் அழிகின்றது இயற்கை

## இலந்தையடி மக்கள் கவலை

புத்தளம், செப். 1

கற்பிட்டி பிரதேச சபைக் குட்பட்ட நுரைச்சோலை இலந்தையடிப் பகுதியிலுள்ள கடற்கரையின் கரையோரப் பகுதிகள் கடலரிப்பினால் பெரும் இயற்கை அழிவுகளை எதிர்கொண்டுள்ளன.

இலங்கையின் சுற்றுலாத் தளங்களில் மிகவும் முக்கியமானதாக விளங்கும் கற்பிட்டி பிரதேசத்தில் இவ்வாறு ஏற்பட்டுள்ள கடலரிப்பினால் நுரைச்சோலை கரையோரப்பகுதியின் கொய்யாவாடி, இலந்தையடி மற்றும் ஆலங்குடா ஆகிய பிரதேசங்களுக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலந்தையடி கடற்பிரதேசத்தில் சுமார் ஒரு கிலோ மீற்றர் வரையிலான கடற்பகுதி இவ்வாறு கடல் அரிப்புக்குள்ளாகியிருக்கின்றது என அந்தப் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர். சுனாமி பாதுகாப்புக்காகவும், சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்காகவும் இலந்தையடி கரையோரப்பகுதிகளில் சவுக்கு மரங்கள் நடப்பட்டபோதிலும் தற்போது தீவிரமான கடலரிப்பினால் அந்த மரங்கள் சரிந்து கீழே வீழ்ந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-இ)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

# பொறுப்புக்கூற வேண்டியவரை ஆணைக்குழு வெளிப்படுத்தும்

## அகிலவிராஜ் தெரிவிப்பு

கொழும்பு, செப்.1

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பதை ஜனாதிபதி ஆணைக்குழு தெளிவுபடுத்தும். கல்வி அமைச்சர் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவரல்லர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில்நேற்று முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

கல்வி அமைச்சர் என்ற ரீதியில் பாடசாலைகளுக்கான பாடப் புத்தகங்களுக்கான உள்ளடக்கங்கள், மதப் புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் நூல்கள் தயாரிக்கப்படும் போது எனது தலையீடு குறித்து வினவப்பட்டது. இவற்றை பேராசிரியர்கள், கலாநிதிகள் ஆகியோரே தயாரிக்கின்றனர். இதில் கல்வி அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சர் தலையிடுவதில்லை எனக்குறிப்பிட்டுள்ளேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் சாட்சியம் வழங்கிய பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேநேரம், முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஆணைக் குழுவில் நேற்றுக்காலை முன்னிலையாகியிருந்தார். (ப-இ)

# 3 ஆயிரம் ரூபா பொதி எங்கே?

## கேள்வி எழுப்புகிறார் சஜித்

கொழும்பு, செப். 1

தேர்தல் காலத்தின் போது வழங்கப்பட்ட உறுதி மொழிகளை நிறைவேற்றும் வரை பொறுப்புடைய எதிர்க் கட்சியாக அரசாங்கத் துக்கு உரிய அழுத்தம் கொடுக்கப்படும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் 3000 ரூபாய் பெறுமதியுடைய அத்தியாவசியப் பொருள் பொதியை வழங்குவதாக அறிவித்தது. ஆனால் இதுவரை வழங்கவில்லை. அரசாங்கம் எப்பொழுது அந்தப்பொதியை வழங்கப்போகின்றது? இது தொடர்பில் நாம் எதிர்க் கட்சி என்ற வகையில் அவதானத்துடன் செயல்படுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# தீவிரவாதத்தை உணரும் தன்மை உயர் அதிகாரிகளுக்கு உள்ளதா?

## அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் கேள்வி

கொழும்பு, செப். 1

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் தேசிய பாதுகாப்பைக் கையாண்ட உயர் அதிகாரிகளுக்கு இஸ்லாமியத் தீவிரவாதம் மற்றும் சஹ்ரானின் தீவிரவாத நடைமுறைகள் தொடர்பாக அரச புலனாய்வுச் சேவை அனுப்பிய பல்வேறு அறிக்கைகளின் உள்ளடக்கங்களைப் புரிந்துகொள்ளும் தன்மை இருந்ததா என்பது கேள்விக்குறியாக உள்ளது என்று அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன கேள்வி எழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் தொடர்ந்தும் சாட்சியமளித்து வரும் அவர்.நேற்றுமுன்தினம் இந்தக் கேள்வியை எழுப்பினார்.

உடனடி பயங்கரவாதத் தாக்குதல் குறித்து 2019 ஏப்ரல் 4ஆம் திகதியிடப்பட்ட வெளிநாட்டு புலனாய்வுத் தகவல்கள் தொடர்பாக எழுத்து மூல ஆவணத்தை அரச புலனாய்வுத்துறை அனுப்பத் தவறியது குறித்து சட்டத்தரணி ஜயசூரிய சாட்சியிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நிலந்த ஜயவர்த்தன "உளவுத்துறையில் மூலோபாயம் மற்றும் செயற்பாடு என இரண்டு வகைகள் உள்ளன. பெரும்பாலான நேரங்களில் பாதுகாப்புச் செயலாளர் ஒருவருடன் மூலோபாய உளவுத்துறைத் தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.

சில கண்டறிதல்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதே அரச புலனாய்வுத்துறையின் கடமையாகும். அந்தத் தகவல்களின் அடிப்படையில் புலனாய்வாளர்கள் தகவல்களை உருவாக்க வேண்டும்" என்று மேலும் தெரிவித்தார். (ப)

# பெண்ணைத் தாக்கினாரென இளைஞனுக்கு மறியல்

கொழும்பு, செப். 1

கந்தளாயில் பெண்ணைத்தாக்கி காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான இளைஞனை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த)

# வடக்கின் அபிவிருத்திக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பர்

## கட்டளைத் தளபதி உறுதி



யாழ்ப்பாணம்,செப்.1


வடக்கு மாகாணத்தில் விவசாயம் உட்பட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சேனாரத்ன பண்டார தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் புதிதாகப் பதவியேற்றுள்ள மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கில் போர் முடிவடைந்த பின்னர் இராணுவத்தினரால் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் சமூக நலநோம்புத் திட்டங்கள் பொதுமக்களுக்காக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கைப் பொறுத்தவரை இது ஒரு விவசாய பூமி. தற்போது ஆட்சியிலுள்ள அரசும் விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அறிவித்திருக்கின்றது. அதற்கமைவாக இராணுவத்தினரும் விவசாயிகளுக்கு உதவுவதற்கு தயாராகவிருக்கின்றோம். எதிர்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான சகல விதமான உதவித் திட்டங்களையும் நாம் வழங்கத் தயாராகவுள்ளோம். வட்டுக்கோட்டையில் விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்படும் குளத்தைப் புனரமைப்புசெய்வதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

இதுபோன்று வடக்கில் எதிர்வரும் காலங்களில் விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இராணுவத்தினர் முன்னெடுப்பர் - என்றார். (க-20,111)



# போரால் பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு வீடு

புங்குடுதீவு, செப்.1

போரால் பாதிக்கப்பட்டு பங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தில் வசித்துவரும் குடும்பம் ஒன்றுக்கு இராணுவத்தினரால் வீடு அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

தியாகி அறக்கொடை நிறுவன இயக்குநரின் 15 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் ராணுவத்தினரால் கட்டப்பட்ட வீடு நேற்றைய தினம் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனவிரத்ன, தியாகி அறக்கொடை நிதிய இயக்குநர், இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி;

இந்த வீடு இரண்டு மாதங்களும் 9 நாள்களுக்குள் ராணுவத்தினரால் மிக வேகமாக கட்டி முடிக்கப்பட்டது.

இனிவரும் காலங்களிலும் இவ்வாறான வீடற்றவர்களுக்கு கொடையாளிகளின் நிதிப் பங்களிப்போடு அமைத்துக் கொடுப்பதற்கு தயாராகவுள்ளோம். அத்தோடு இராணுவம் என்ற வகையில் இனம் பாராது மொழி பாராது நல்லிணக்கத்தின் அடிப்படையில் மக்களுக்குச் சேவையாற்றவே இந்த இராணுவம் உள்ளது. அந்த உணர்வின் அடிப்படையில் வடக்கில் மக்களுக்கு எமது சேவையை வழங்குவோம் - என்றார். (ஐ-20)

# புகலிட நிலத்தை துப்புரவு செய்தோரை கைது செய்க

## நளின் பண்டார எம்.பி. வலியுறுத்து

புத்தளம், செப். 1

புத்தளம் - ஆனைவிழுந்தான் ரம்சார் ஈரவலய புகலிட நிலத்தை சட்டவிரோதமாகத் துப்புரவு செய்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் உடனடியாகக் கைது செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

புத்தளம் - ஆனைவிழுந்தான் ரம்சார் ஈரவலய புகலிட நிலத்தை சட்டவிரோதமாக துப்புரவு செய்தமை தொடர்பில் ஆராய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கையாக ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 7 பேர் கொண்ட குழுவொன்று குறித்த பகுதிக்குச் சென்றது. இதில் கலந்து கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

அதே வேளை ஈரநிலத்தை அபகரிப்புச் செய்த குற்றச்சாட்டில் பிரபல அரசியல்வாதி ஒருவரின் சகோதரரைக் கைது செய்ய பல குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றன எனப் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள ஆனைவிழுந்தான்ரம்சார் ஈரநில அபகரிப்பு விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள தொழிலதிபர் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையிலே குறித்த நபருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆனைவிழுந்தான் ஈரநில அபகரிப்பு விவகாரத்தில் கைது செய்யப்பட்டவர்கள் எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ப-இ)

# சோகா மல்லி மருத்துவமனையில்

கொழும்பு, செப். 1

சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர வெலிகடைச் சிறைச்சாலையின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜயசேகர சாவுத் தண்டனைக் கைதியாக வெலிகடைச் சிறைச்சாலையில் வை.ஓ சிறைப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், அவர் சிறைச்சாலை வைத்தியசாலையின் மூன்றாவது விடுதியில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் இந்த விடுதியில் ஏற்கனவே சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தங்காலை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் சம்பத் விதானபத்திரன மற்றும் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மேஜர் அஜித் பிரசன்ன ஆகியோரும் தங்கி இருக்கின்றனர் எனவும் சிறைச்சாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)



யாழ். அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சோனகதெரு சின்னப்பள்ளிவாசல் மையவாடியில் சிரமதானப் பணி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. (க-இ)



# வவுனியாவில் மினி சூறாவளி

வவுனியா,செப்.1

வவுனியா கணேசபுரம் பகுதியில் நேற்று மதியம் பெய்த கடும்காற்றுடன் கூடிய மழையால் பல வீடுகளின் கூரைத் தகடுகள் காற்றில் அடித்துச் செல்லப்பட்டன. பயன்தரும் மரங்களும் வீழ்ந்துள்ளன.

கணேசபுரத்தில் 34 வீடுகளும், சமயபுரத்தில் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இதேவேளை பலமான காற்று வீசியதால் வாழை,தென்னை போன்ற பயன்தரு மரங்களும் முறிந்து விழுந்துள்ளன.

வவுனியாவில் பரவலாக இடிமின்னலுடன் கூடிய மழை பொழிந்துள்ளதுடன், சில பகுதிகளில் கடுமையான காற்றும் வீசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க -110)

# ம. ம. முன்னணியில் இருந்து தூக்கி எறியப்பட்டார் அனுசா

மலையக மக்கள் முன்னணியின் அனைத்து பொறுப்புகளில் இருந்தும் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலும் இருந்தும் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்தும் அனுசா சந்திரசேகரன் வெளியேற்றப்பட்டுள்ளார் என்று மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் ஏ.லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அனுசா சந்திரசேகரன் கட்சியின் யாப்புக்கு முரணாகச் செயற்பட்டதன் காரணமாக அவரை அனைத்துப் பதவிகளில் இருந்தும் வெளியேற்றுவது எனவும் எதிர்வரும் காலத்தில் அனுசா சந்திர சேகரன் மலையக மக்கள் முன்னணியின் கொடியையோ கட்சியின் நிறத்தையோ அல்லது அவர் ஏற்கனவே வகித்த பிரதிப் பொதுச் செயலாளர் நாயகம் என்ற பதவியையோ எந்தச் சந்தர்ப்பத்திலும் பாவிக்க முடியாது. ம.ம.முன்னணியின் ஓர் அங்கமாகச் செயற்பட்ட ஆசிரியர் முன்னணியின் செயலாளராகச் செயற்பட்ட எஸ்.ரவீந்திரன் கட்சியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் வெளியேறுகிறார் எனவும் மிக விரைவில் புதிய ஆசிரியர் முன்னணி உருவாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (ப-இ)

# அநுருத்த உள்ளிட்ட நால்வருக்கு பிணை

கொழும்பு,செப்.1

கைது செய்யப்பட்ட நீர்கொழும்பு சிறைச்சாலையின் முன்னாள் அத்தியட்சகர் அநுருத்த சம்பாயோ உள்ளிட்ட நால்வருக்கும் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியுள்ளது.

நீர்கொழும்பு சிறைக் கைதிகளுக்கு சொகுசு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த சம்பவம் தொடர்பில், இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் நால்வரும் பிணையில் விடுக்கப்பட்டுள்ளனர். (க)



# தொண்டமானாறு
# ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய
# தேர்த்திருவிழா சிறப்புமலர்
## 01.09.2020

### ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வரலாற்றுச் சுருக்கம்

இலங்கைத் திருநாட்டில் அமைந்த சைவத் திருத்தலங்களில் வரலாற்றுச் சிறப்பும் திருவருட்தன்மையும் கோடானுகோடி பக்தர்களின் பக்திக்குரிய ஆலயமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் யாழ்.மாவட்டத்தின் வடமராட்சிப் பகுதியில் சரித்திர தொடர்புடைய தொண்டைமானாறு எனும் வளம்மிக்க கிராமத்தில் அமைந்துள்ளது. உலகில் எவ்விடத்தி லும் காணப்படாத தனித்துவமும் தெய்வத்திருவருள் தன்மையும் புதுமைப் பொலிவும் கொண்டுள்ள இவ்வாலயத்தில் முருகப் பெருமானது திருவருளானது மிகுந்து பிரகா சித்துக் கொண்டிருக்கின்றது. கந்தப் பெருமானின் கருணை வெள்ளம் மடைதிறந்து பாய்கின்றது. அவரை நாடிவரும் அடியார்கள் மட்டுமன்றி ஆங்காங்கே இருந்து பக்தி வழிபாடு செய்வோரும் கருணைக் கடலில் மூழ்கி திருவருட் பிரசாதங்களை தினமும் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இவ்வாலய மானது மூர்த்தி. தலம். தீர்த்தம் ஆகிய அபரித மார்க்கத்தைக் கொண்டு பூரணம் என்று கூறும் படியாக பத்திர சத்தி முகூர்த்தத்தில் பொலிந்த தன்மையிலுள் முருகன் அடியார் பக்த சிரோன்மணி செல்வச் சந்நிதி மேவிய பூரணனே எனக் கசிந்து பாடியுள்ளார்.

இவ்வாலயம் தெய்வீக கந்தபுராணத்துடன் தொடர்புடையாதலால் இதன் பழைமை அளவிடற்கரிதான தொன்மையைக் கொண்டுள்ளது புலனாகின்றது திருச்செந்தூர் பதியிலிருந்து கந்தப்பெருமான் வீரவாகுத்தேவரை மகேந்திர புரிக்கு சூரனிடத்து தூதனிப்பியதாகக் குறிப்பிட்டு தூதுவரான வீரவாகுத் தேவர் வட இலங்கையின் வல்லி நதிக்கரையில் (தற்போது ஆலயத்தின் மேற்குப் புறத்தே) உள்ள கல்லோடையில் (ஆலயத்தின் வட புறத்தே) காலடி பதித்துச் சூரனிடம் சென்றார். காலடி பதித்த பாதச்சுவடுகள் இன்றும் ஆலய உரிமையாளர்களால் பாதுகாக்கப்படுகின்றது. ஏராளமான பக்தர்கள் பார்வை யிட்டு வணங்கிச் செல்கின்றனர். சூரனிடத்துச் சென்று திரும்பிய வீரவாகுத் தேவர் சந்திக்கால மேற்பட்ட தன்மையினால் சந்திக்கால பூசைக்கடனை வல்லிநதிக்கரையில் செய்தார். இச்சந்திக்காலக்கடன் செய்த இடம் இன்று சந்நிதியாக மருவி ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயமாக மிளிர்கின்றது. இவ்விடத்தில் கந்தப்பெருமானை வழிபாடு செய்த தேவலோக கந்தர்வரின் வரலாறு பக்தி பூர்வமானது.

தேவலோகத்தில் வியாழபகவானது கட்டளைக்கு ஒழுகத்தவறிய கந்தர்வரான ஜராவசு பகவானின் சாபத்துக்கு ஆளாகிப் பூமியில் பிறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கந்தர்வரான ஜராவசு பகவானிடம் தனக்கு சாபவிமோசனந் தருமாறு வேண்டுதல் செய்தபோது பகவான் சாபத்தை மாற்ற முடியாது என்றும் கதிர்காமக்காட்டுப் பகுதியில் யானையாக அவதரிக்கும் போது கதிர்காமக் கந்தனை தரிசிக்க வரும் சிகண்பு முனிவரால் விமோசனமளிக்கப்படு மென்று பணித்தருளினார். சாபம் பெற்ற ஜராவசு அக்காட்டில் யானையாக அவதரித்து பல அட்டகாசங்கள் செய்தது.

இது இவ்வாறிருக்கையில் தேவலோகத்தில் உள்ள சிகண்டி முனிவர் இசைப்பிரியனாக இசை நுணுக்கங்களை அறிய விருப்பமுடையோனாக முருகப் பெருமானிடம் வேண்டுதல் செய்தார். பெருமான் முத்தமிழ் வித்தரான அகத்தியர் தென்பொதிகையில் இருப்பதாகவும் அவரிடம் சென்று அறியுமாறு பணித் தருளினார். இதன் பிரகாரம் சிகண்டி முனிவர் பொதிகை சென்று அகத்தியரிடம் இசை நுணுக்கங்களைத் தெரிந்து கதிர்காமக் கந்தனை வழிபாடு செய்யும் நோக்கில் சீடர்களுடன் வந்து கொண்டிருக்கையில் ஜராகவசு என்னும் கந்தர்வரான யானை அவர்களைத்தாக்க முற்பட்டது. முனிவர் தனது ஞானத்திருஷ்டியினால் சாபத்தையும் விமோசனத்தையும் தெரிந்து முருகப் பெருமானை நினைத்து சண்முக மந்திரத்தை உச்சிசரித்து அருகில் இருந்து வெற்றிலையை நுள்ளி எடுத்து வேலாகச் சென்று அழிக்க விடுத்தார். வெற்றிலையானது கதிர்வேலாக மாறி யானையை வீழ்த்த அவ்விடத்தில் கந்தர்வன் தோன்றி தனது வரலாற்றைக் கூற முனிவர்களும் சீடர்களும் அபயம் அளித்து கதிர்காமம் கூட்டிச் சென்று வழிபட்டனர். பின்னர் சிகண்டி முனிவர் ஜராவசு கந்தர்வனிடம் இலங்கையின் வடபால் அமைந்த வல்லி நதிக்கரையில் வீரபாகு தேவர் வணங்கிய புனித இடத்துக்குச் சென்று முருகப்பெருமானை தியானித்து வழிபாடுகள் செய்யுமாறு பணித்தார். அதன் பிரகாரம் ஜராவசும் வல்லி நதிக்கரையில் தற்போது பூவரசு விருட்சம் அமைந்த இடத்தில் பெருமானைத் தியானித்து பக்தியுடன் மௌனப்பூசை வழிபாடு செய்து முத்தி நிலை பெற்றார். சிகண்டி முனிவர் ஜராவசுவின் சாபத்தைப் போக்கவிடுத்த வெற்றிலை இன்று பெருமான் வீதிவலம் வரும் வேளையில் கதிர்வேற் பெருமானின் நடுப்பாகத்தில் காட்சி தந்து பத்திர சத்தி முகூர்த்தகம் பரவசம் ஆகி பிரகாசிக்கின்றது ஜராவசு வழிபாடு செய்த இடத்தில் அமைந்த

தொடர்ச்சி ➡












# தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா சிறப்புமலர் - 01.09.2020

**வரலாறு தொடர்ச்சி**

பூவரசு விருட்சம் அடியார்கள் பக்தி கொண்டு பூசித்து துன்பங்களை நீக்கும் தெய்வகத்தன்மையைக் கொண்டுள்ளது. இவ்வாலயத் தோற்றத்துக்குக் காரணமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் ஸ்தாபகரான மருதர் கதிர்காமரின் வரலாறும் இவ்வாறு பக்தி பூர்வமானது.

இவ்வாலயத்தில் தொன்று தொட்டு கதிர்காமக் கொடியேற்றத்தின்போது பெருமானை உழுத்தம்பிட்டு நிவேகித்து அனுப்புவதும் பின் தீர்த்தமாடிய பின் பயத்தம் துவயலும் இளநீரும் படைத்து வரவேற்பதும் இன்று பக்தியுடன் கொண்டாடும் வழிபாடுகளாக அமைந்துள்ளது. இவ்வூர் ஆண்டியப்பர் என்பவர் இவ்வாலயத்தில் முதல் முறையாகப் பூசை நேர்த்தியினைச் செய்தார். நாளடைவில் அடியார்கள் பலரும் நேர்த்திக்கடனை செய்து வருகின்றனர். இன்று நாட்டில் ஏற்பட்ட சுமூக சூழ்நிலையால் வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் பெருமான் ஆலயத்துக்கு வருகை தருவதுடன் ஆலயம் மேலோங்கி வருவதை உணர்ந்து பல்வேறு பங்களிப்புக்களைச் செய்து திருவருளைப் பெறுகின்றனர்.

சி.செல்வலிங்கம்
( செயலாளர்.)
செல்வச்சந்நிதி ஆலய நிர்வாக சபை.

## இரத சந்நிதியானே எம்மக்களுக்காக இரங்கிடு

ஆற்றங்கரைதனில் வீற்றிருக்கும் சந்நிதி வாழ் முருகா!
அருள் வேண்டி வருவோர்க்கு வரமருளும் முருகா!
அடியவர்க்கு அமுதளிக்கும் அன்னதானக் கந்தா
பச்சை மயில் ஏறி வரும் பாலமுருகா!
பரமனுக்கு உபதேசம் செய்த பாலமுருகா!
நாட்டில் நிம்மதியோ இன்னும் நிலைபெறவில்லை
கொரோனா என்னும் கொடிய நோயால்
உலக மக்கள் அனைவரும் தினம். தினம்.
உயிருக்காக ஏங்கும் நிலை வேலவா!
உந்தன் திருமுகத்தை ஒரு முறை காட்டு வேலவா!
நினைந்து நினைந்து உன்னை நெஞ்சுருக வேண்டுகிறோம்
எம்மக்களை இனியும் அல்லல்பட விடாதே. வேலவா
இரதமேறும் சந்நிதியானே எம்மக்களுக்காக இரங்கிடு

நயினை விசு-இராசநாயகம்




























# குளத்தை நிரவி சுற்றுலா மையம் வவுனியா சமூக ஆர்வலர் விசனம்

## தேவையற்ற பகுதியே மூடப்பட்டது: அதிகாரிகள் விளக்கம்

வவுனியா, செப். 1

**வவுனியா குளத்தின் நீரேந்துப் பிரதேசத்தின் ஒரு பகுதியை மண் போட்டு நிரவி சுற்றுலாமையம் அமைக்கப்படுவது தொடர்பில் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவித்துள்ளதுடன், குளத்தின் கீழ் விவசாயம் செய்யும் விவசாயிகளும் கவலை வெளியிட்டுள்ளனர். எனினும் குளத்தின் தேவையற்ற பகுதியே நிரவப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.**




வவுனியா குளத்தின் ஒரு பகுதியை அழகுபடுத்தி சுற்றுலா மையமாக உருவாக்கி படகுச் சவாரி, நீருக்கு நடுவில் சிற்றுண்டிச்சாலை, சிறுவர்களுக்கான விநோத விளையாட்டுக்கள், மீன் மசாஜ், என்பனவற்றை உள்ளடக்கிய செயற்றிட்டம் ஒன்று வவுனியா நகர சபையால் முன்னெடுக்கப்பட்டு நேற்றுமுன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்தின் போது குளத்தின் ஒரு பகுதி மண்போட்டு நிரவப்பட்டது. நகர சபையின் இந்தச் செயற்பாட்டுக்கே சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். குளமொன்றின் நீர் வரத்துப் பகுதி மற்றும் நீரேந்துப் பிரதேசத்தை மூடுவதால் நாளடைவில் வவுனியா நகர மத்தியில் பல ஏக்கர் விவசாய நிலத்தைக் கொண்டமைந்துள்ள குளம் மூடப்படும் அபாயம் ஏற்படும் எனவும் நகரசபை இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுவதானது மக்களுக்குப்பிழையான முன்னுதாரணமாகக் காணப்படும் எனவும் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஏற்கனவே கழிவுநீர் சுத்திகரிப்புத் தொட்டி அமைப்பதற்காக வவுனியா குளத்தின் ஒரு பகுதி எடுக்கப்பட் டநிலையில் ஏனைய பகுதிகளையும் நிரவுவதாக அவர்கள் குற்றம் சுமத்து கின்றனர். இதுதொடர்பாக மாகாண நீர்ப்பாசன திணைக்க ளத்தின் பிரதிப்பணிப்பாளரிடம் கேட்டபோது;

குளத்தை அழகு படுத்துவதற்காகவே அந்தப் பகுதியில் அனுமதி வழங்கப்பட்டது.

அந்தப் பகுதியானது குப்பைகள் கொட்டும் இடமாகவும், சட்டவிரோத செயற்பாடுகளுக்குமே பயன்படுத்தப்பட்டு வந்தது. குறித்த பகுதியில் நீர் தேங்கும் அளவும் மிகவும் குறைவானது. அந்த நீர் பிரதான குளப்பகுதியுடன் தொடர்புபடாத நிலையிலேயே காணப்படுகின்றது. அத்துடன் பூங்கா அமைப்பதற்காக அந்தப் பகுதியில் எவ்வளவு மண் கொட்டப்படுகின்றதோ அதே அளவு மண் குளத்திலிருந்து வெளியேற்றப்படவேண்டும் என்று நாம் உத்தரவிட்டுள்ளோம் என்றார். (ஐ-110)



## 1538 போதை மாத்திரைகளுடன் இளைஞன் கைது

மட்டக்களப்பு,செப்.1

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலைநகர் பிரதேசத்தில் போதை மாத்திரைகள் மற்றும் கேரளா கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் நேற்றுத் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார். இளைஞனிடம் இருந்து ஆயிரத்து 538 போதை மாத்திரைகள், 2 ஆயிரம் மில்லி கிராம் கேளரா கஞ்சா மற்றும் 20 கிராம் ஹெரோய்ன் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-150)




## மாணவர்களுக்கு மஞ்சள் பேருந்து

கொழும்பு, செப்.1

பாடசாலை மாணவர்களின் சேவைக்கு பயன்படும் பேருந்துகளுக்கு மஞ்சள் நிறப்பூச்சு பூசும் நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது. அதற்கமைய தற்போது 10 பேருந்துகளுக்கு மஞ்சள் நிறம் பூசப்பட்டுள்ளது என அதன் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாக பாடசாலை மாணவர்களுக்கு பிரத்தியேக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இந்த நிலையில் மாணவர்களின் போக்குவரத்திற்காக மட்டும் பயன்படுத்தவே இவ்வாறு பேருந்துகளுக்கு நிறப்பூச்சு பூசும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## இனம் தெரியாத நபர்களால் முச்சக்கரவண்டி தீக்கிரை!

வவுனியா, செப்.1

வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரிக்குளம் பகுதியில் முச்சக்கர வண்டியொன்று இனம் தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நேற்றுமுன்தினம் இரவு குறித்த பகுதியில் வீடொன்றில் நிறுத்திவைக் கப்பட்டிருந்த முச்சகரவண்டியை இனம் தெரியாத நபர்கள் தீயிட்டு எரித்துவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்திருந்தார். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-110)



## திரும்பப் பெறப்பட்டது முன்னாள் எம்.பிக்கள் 81 பேரின் பாதுகாப்பு

கொழும்பு, செப்.1

பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த சில முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பதவிக்காலத்தில் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு மீளப் பெறப்பட்டுள்ளது. இதற்கமைய 81 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக் குறித்து விரைவில் அரச உயர்மட்டம் தீர்மானம் எடுக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றனர். (ம)

## கோப்பாய் கல்விக் கோட்டத்தில்

# பாடசாலை நிர்வாகத்துக்கு எதிராக நேற்று போராட்டம்

கொழும்பு, செப்.1

யாழ்ப்பாணம் கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலை ஒன்றில் நிர்வாக சீர்கேடு இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டப்படுவதோடு, அதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நேற்றுக் கவன வீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

பாடசாலையில் குழப்பங்களை ஏற்படுத்தும் ஆசிரியர்களை இடமாற்றம் செய், தமிழர் ஆசிரியர் சங்கமே ஆசிரியர்களை தவறாக வழிநடத்தாதே, வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளே ஊழல் புரிவோரை பாதுகாக்காதே, வலயக்கல்விப் பணிப்பாளரே ஆசிரியர்களைத் தூண்டி அரசியல் செய்யாதே, மாணவர்களின் உணவுப் பொருள்களைத் திருடியவர்கள் மீது நடவடிக்கை எடு போன்ற வாசகங்களை எழுதிய பதாகைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் தங்களின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை ஆளுநர் செயலகத்தில் கையளித்தனர்.

மேலும் தங்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்து ஆளுநர் விரைவில் தீர்வு பெற்றுத்தர வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ம-20)

# கஞ்சா மூலம் சம்பாதிப்பதற்கு அமைச்சர் பந்துல யோசனை



கொழும்பு, செப்.1

**கஞ்சாப் பயிரில் இருந்து மருந்துகளைத் தயாரித்து ஏற்றுமதி செய்தால், அனைத்து ஏற்றுமதிப் பொருள்களை விட அதிகளவான வெளிநாட்டு அந்நியச் செலாவணியை கஞ்சா மூலம் சம்பாதிக்க முடியும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையில் கஞ்சா பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருப்பதன் காரணமாகவே விஷத்துடன் கூடிய கஞ்சாவை பொது மக்கள் சட்ட விரோதமாகப் பயன்படுத்த நேரிட்டுள்ளது.

உலகில் உள்ள வேறு நாடுகள் அதிகளவில் கஞ்சாவை ஏற்றுமதி செய்கின்றன. அரசுக்கு எதிராக பலமாக மோதியதன் காரணமாக பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையில் கஞ்சாவுக்கு முற்றாகத் தடை விதித்தனர் என்பது வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், பல்துறை சார்ந்த தொழில்களை எப்படி உருவாக்குவது என்று மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (வ-இ)




## மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக '1990 -சுவசரிய' அம்புலன்ஸ் சேவை

கொழும்பு, செப்.1

மனநலம் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்ப்பதற்காக, "1990 சுவசரிய" அம்புலன்ஸ் சேவையைப் பயன்படுத்த சுகாதார அமைச்சகம் ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் உள்ள சுவசரிய ஊழியர்கள் இந்தத் திட்டத்திற்கான பயிற்சியை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சுனில் டி அல்விஸ் கருத்து வெளியிடுகையில்;

"புதிய முறை நோயாளிக்கு மிகத் துல்லியமான சிகிச்சையை விரைவாக வழங்கும், நோயாளியின் உறவினர்கள் அல்லது பாதுகாவலர்களுக்கு வசதியாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. மனநல நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கும் நோயாளிகளின் போக்குவரத்திற்கும் ஒரு குறிப்பிட்ட நெறிமுறைகளில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது.

ஆகையினால், மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் மனநல மருத்துவர்களுடன் கலந்தாலோசித்து ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நாடு முழுவதும் கட்டம் கட்டமாக செயற்படுத்த சுகாதார அமைச்சகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது- என்றார். (ந-இ)

## சபைச் செயலாளருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.1

மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் மற்றும் சபை உறுப்பினர்கள், மானிப்பாய் பிரதேச சபை செயலாளருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி, உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மானிப்பாய் பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில், மானிப்பாய் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில், உதவி உள்ளூராட்சி ஆணையாளரைச் சந்தித்து முறையிட்டனர்.

மானிப்பாய் பிரதேச சபையில் சில முறைகேடான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நிர்வாகத்துக்குப் பொறுப்பான சபைச் செயலாளரால் உரிய பதில் வழங்காமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். செயலாளரின் செயற்பாட்டால் சபையால் முன்னெடுக்கப்படும் இந்த வருடத்துக்கான அபிவிருத்தி திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஏற்கனவே எழுத்து மூலமாக பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இன்று வரை நடவடிக்கை எடுக்கவில்லை. அதனையடுத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளரைச் சந்தித்து முறையிட்டனர். (க-20)



## இலங்கையில் அனல்நிலை கண்களில் மிக அவதானம்!

கொழும்பு, செப்.1

இலங்கையில் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை காரணமாக அவதானமாக செயற்படுமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதிக வெப்பத்தினால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும் என சிறப்பு மருத்துவக் குழுவொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

கண் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக வெளி இடங்களுக்கு பயணிக்கும்போது கண்ணாடி அணிவது மிகவும் அவசியம் என தேசிய கண் மருத்துவமனையின் விசேட கண் வைத்தியர் முதிதா கலதுங்க தெரிவித்துள்ளார். (ம)

## விவசாயத்துறையில் தற்காலிக தொழில்: கொரிய அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, செப்.1

கொரியாவில் ஒப்பந்தகாலம் நிறைவுற்றுள்ள இலங்கைப் பணியாளர்களுக்கு, தற்காலிகமாக விவசாயத்துறையில் தொழில் வழங்க, கொரிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

3 மாதத்திலிருந்து 6 மாதம் வரையான காலப் பகுதிக்கு, இந்தத் தற்காலிக தொழில்வாய்ப்பு வழங்கப்படவுள்ளது என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதி பொறுப்பதிகாரி மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார். (ற-இ)



## இன்றைய நாள்

**மேடம்:** முயற்சிகள் வெல்லும் நாள். கடந்த கால சாதனைகளை நினைத்து மகிழ்வீர்கள். உடன்பிறந்தோர் பாசமாக இருப்பார்கள். மூத்தவர்கள் முக்கிய ஆலோசனை தருவார்கள்.

**இடபம்:** புதிய நம்பிக்கை தெரியும் நாள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். உடல் நிலை தேறுவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகளைச் சற்றுத் தள்ளிப் போடுவது நல்லது.

**மிதுனம்:** சங்கடம் தீரும் நாள். உணர்ச்சிபூர்வமாக பேசுவதைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகளிடம் அதிக மரியாதை எதிர்பார்க்க முடியாது. திடீர் முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**கடகம்:** சுமாரான நாள். வேலைச் சுமையால் அசதி ஏற்படும். சில விடயங்களுக்கு அனுபவசாலிகளின் ஆலோசனையைப் பயன்படுத்துவது நல்லது. சிறிய உடல் உபாதைகள் ஏற்படும்.

**சிம்மம்:** மன நிம்மதி மீளும் நாள். கடன் வாங்க வேண்டி வரும். வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டு. பணியாளர்களுக்கு பொறுமை தேவை. பகை பாராட்டியவர்கள் உங்களின் உதவி தேடி வருவார்கள்.

**கன்னி:** உங்கள் மதிப்பு உயரும் நாள். திட்டமிட்ட செயல்கள் நிறைவேறும். எதிலும் நிதானப் போக்கு இருக்கும் என்பதால் பொறுமை தேவை. வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும்.

**துலாம்:** சிறு மனச் சலனங்கள் ஏற்படும் நாள். உறவினர் வீட்டு விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். தந்தை வழியில் ஆதரவு பெருகும். வியாபாரப் பேச்சு வார்த்தை நல்ல விதமாக முடியும்.

**விருச்சிகம்:** இருவித பலன்கள் உள்ள நாள். வியாபாரத்தில் வேலையாட்களின் நடத்தை வருத்தம் ஏற்படுத்தும். பணியாளர்களின் திறமை வெளிப்படும்.

**தனுசு:** விரும்பியது நடைபெறும் நாள். வேற்று மொழி பேசுபவர்கள் நன்மை செய்வார்கள். புதிய சிந்தனைகள் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சி குறையும்.

**மகரம்:** ஆதாயம் பெறும் நாள். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் மாற்றமில்லை. பணியாளர்கள் பயன் இன்றிப் பொறுப்பேற்க வேண்டி வரும்.

**கும்பம்:** எதிர்ப்புகள் அடங்கும் நாள். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். பழைய கடனை பற்றிய கவலை சற்றே தீரும்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். பிடிவாதப் போக்கை சற்றே மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளின் செயலால் நிம்மதி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற அக்கறையுடன் செயல்படுவீர்கள்.




கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று திங்கட்கிழமை சிறப்புற இடம்பெற்றது. மீள்குடி யேற்றத்தின் பின்னர் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, தொடர்ந்து புதிதாக சித்திரத் தேர் வடிமைக்கப்பட்டு, நேற்று பொது மக்கள் ஒன்று கூடி வடம் பிடித்து பக்தியோடு தேர் இழுத்தனர். (க-214)

### செட்டிகுளம் மருத்துவமனையின்

# மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு ஆர்ப்பாட்டம்

**வவுனியா, செப்.1**

**வவுனியா செட்டிகுளம் ஆதார மருத்துவமனையில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யுமாறுகோரி அந்தப் பகுதி மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. செட்டிகுளம் ஆதார மருத்துவமனைக்கு முன்பாக காலை 8.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் தெரிவித்ததாவது:

செட்டிகுளம் மருத்துவமனையில் பல நிர்வாகக் குறைபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பாக மருத்துவர் பற்றாக்குறை காரணமாக நோயாளர் விடுதி மூடப்பட்டுள்ளதுடன், சிறிய நோய்களுக்காகச் சிகிச்சைக்கு சென்றாலும் வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்படும் நிலையே காணப்படுகின்றது.

இதனால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். கூலித்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள இப்பகுதி மக்கள் வவுனியா சென்று வருவதற்கு பொருளாதார ரீதியாக பல துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

மருத்துவர் விடுதியும் இயங்காமல் போனதால் நோயாளர்கள் மேலும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர். அதேபோல பிரேத அறையும் இங்கு இருக்கும் நிலையில் உயிரிழந்தவர்களிற்கான சட்டவைத்திய பரிசோதனைகள்கூட வவுனியா வைத்தியசாலையிலேயே இடம்பெற்று வருகின்றது - என்றனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பொறுமையிழந்த நிலையில் மருத்துவமனைக்குள் செல்ல முற்பட்டனர். இதன்போது பொலிஸாரால் மருத்துவமனையின் பிரதான வாயில் மூடப்பட்டது. இதனால் நீண்ட நேரமாக வாயிலை மறித்தபடி பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சம்பவ இடத்திற்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மக்களுடன் கலந்துரையாடியதுடன், இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரிவிப்பதுடன், வருகின்ற ஒரு வாரத்திற்குள் இந்த வைத்தியசாலையில் இருக்கின்ற அநேகமான பிரச் சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை எடுப்பேன் என்று வாக்குறுதி வழங்கியதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், மற்றும் செட்டிகுளம் பிரதேசசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-110,18)

## தம்புள்ளை விபத்தில் நால்வர் படுகாயம்

தம்புள்ளை, செப்.1

தம்புள்ளை ஹபரணை பிரதான வீதியின் திகம்பதன பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்து, தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காரொன்றும் லொறியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-இ)

## இரசாயனத் தாக்கமற்ற உணவு: சேதனப் பசளை வழங்க நடவடிக்கை

கொழும்பு, செப்.1

இரசாயனத் தாக்கமற்ற உணவு வகைகளை உற்பத்தி செய்யும் நோக்கில், பெரும்போகத்திற்கென 45 ஆயிரம் ஹெக்ரேயர் செய்கை நிலங்களுக்குச் சேதனப் பசளையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய உர செயலாளர் அலுவலகம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பணிப்பாளர் மஹேஸ் கம்மன்பில தெரிவித்துள்ளதாவது:

நான்கு கட்டங்களாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இயற்கை உரத்தை விநியோகிக்கக்கூடிய வழங்குநர்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இரசாயன உரத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செய்கைகளுக்கு பதிலாக எதிர்காலத்தில் இயற்கை உரம் முற்றிலுமாக பயன்படுத்தும் சூழலொன்று உருவாக்கப்படும் எனத் தெரிவித்தார். (வ)

## குடும்பத் தகராறு கொலையில் முடிவு

குடும்பத் தகராறு காரணமாக ஏற்பட்ட மோதலில் மதவாச்சியில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது எனத் தெரியவருகிறது. கொல்லப்பட்டவருக்கும் அவரது சகோதரியின் கணவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை நடந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். தப்பிச்சென்ற சந்தேகநபரை கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (வ)

## போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் தொடர்ந்தும் மறியலில்

கொழும்பு, செப்.1

போதைப்பொருள் வர்த்தகர்களுடன் தொடர்புடையோர் எனும் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் ஒழிப்பு பிரிவின் 13 அதிகாரிகளையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் நேற்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இதற்கமைய, அந்த அதிகாரிகளை எதிர்வரும் 14ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (வ)

## சிறுமி துஷ்பிரயோகம்; தந்தை கைது

கொழும்பு, செப்.1

15 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சியம்பலந்துவாவையில் இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்டவர் தனது மகளைப் பலமுறை பாலியல் வன்கொடுமை செய்தமை ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் வேலைக்காக வெளிநாட்டில் உள்ளார் எனத் தெரியவருகிறது.

கைதானவர் நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளமையுடன், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மொனராகல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ-இ)

## பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் கைது

கொழும்பு, செப்.1

பாதாள உலகக்குழு உறுப்பினர்களான கிம்புலா எலே குணா மற்றும் அவரது சகோதரரான சுரேஷ் என்பவர்களின் உதவியாளர்கள் 8 பேரை சப்புகஸ்கந்த பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து 70 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-இ)

## பதவி வெற்றிடம்
## (பெண்கள்மட்டும்)

யாழ்நகரில் இயங்கிவரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு எழுதுவினைஞர்கள் (Clerk பெண்கள் மட்டும் தேவை.

விரும்புவோர்கள் எதிர்வரும் 12.09.2020 இற்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக்கோவையை அனுப்பிவைக்கவும்

முகவரி: **DSI** மொத்த விற்பனை நிலையம் 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி




எமது பிரதேச சபையில் கடமையாற்றும் **பி.பரமேஸ்வரன்** அவர்களின் அன்பு மனைவி

**திருமதி மரிசித்தா குருஸ் பரமேஸ்வரன்**

அவர்கள் 30.08.2020 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை
ஊழியர் நலன்புரிச் சங்கம், பளை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**பிச்சான் அருணகிரிநாதன்**

தோற்றம் 19 . 04 . 1962
மறைவு 02 . 08 . 2020

கடந்த 02.08.2020 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு பல்வேறு வழிகளிலும் உதவியும், ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும், தொலைத் தொடர்புசாதனத்தின் மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலைதூரங்களில் இருந்து அன்னாரைத் தேடிவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

C/43, 300 வீட்டுத்திட்டம்,
நாவற்குழி.

குடும்பத்தினர்.

## இருபத்தோறாம் ஆண்டு நினைவஞ்சலி




## செல்வி திருமகள் கனகசபை

**திதி: சதுர்த்தசி**

மூவேழு வருடங்கள் உருண்டோடிப் போனதம்மா!
மூவிரு முகத்தோனின் தேர் காண நீ சென்று
ஆவி துடித்து அழுகிறோம் உன் உற்றோர்
பாவிகள் ஆனோம் உனை பிரிந்து இவ்வுலகில்

உன் இடம் என்றும் வெற்றிடமே எம் வாழ்வில்
உனையன்றி யாரும் ஈடு செய்ய முடியாதே
சந்நிதியான் திருக்கழல்கள் சரணடைந்தோம் - திருமகளே
எம் நிதியே அவனடியில் அமைதி கொள்வாயே.

த.மு: 125, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
நி.மு. மீசாலை வடக்கு, மீசாலை.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

# ராஜபக்சக்களை பலப்படுத்தும் அரசமைப்புக்கு ஆதரவளியோம்!

## கூறுகின்றார் மத்தும பண்டார

கொழும்பு, பெப். 1

ஜனநாயக தன்மையைக் கொண்ட அரசமைப்பு திருத்தம் ஒன்றை அரசு கொண்டுவந்தால் அதற்கு ஆதரவளிப்போம் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ராஜபக்சக்களின் அதிகாரத்தை மேலும் பலப்படுத்தும் நோக்கத்தில் கொண்டுவரப்படும் அரசமைப்பு திருத்தத்துக்கு தம்மால் ஆதரவளிக்க முடியாது என்றும் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட ஆட்சிமுறையே மீண்டும் செயற்படுத்தப்படுமா? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்குவது தொடர்பிலும், 20 ஆவது ஆரசமைப்பு திருத்தத்தை கொண்டுவருவது தொடர்பிலுமே அரசு கவனம் செலுத்துகிறது. அதற்கமைய 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை நீக்கி இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றுக் கொள்ளலாம் என்ற சட்டத்தக் கொண்டு வருவதற்கே முயற்சிக்கின்றனர். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்சவை நாடாளுமன்றுக்கு கொண்டுவருவதே அரசின் நோக்கம்.

ஆட்சியைக் கைப்பற்றியவுடன் குடும்ப அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்காக 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தை மாற்ற முயற்சிக்கும் இவர்கள், நாட்டின் சுற்றுச் சூழலையும் தேசிய உரிமைகளையும்கூட விட்டு வைக்கவில்லை. சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு ஆட்சி அமைத்தவர்கள், ஆட்சிக்கு வந்தவுடனே அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வுகளில் ஈடுபடுவதற்கும், மண்ணை ஏற்றிச் செல்வதற்கும் அனுமதி வழங்கினர். தற்போது பாதுகாப்பு வனப்பகுதிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

13 ஆவது அரசமைப்பு திருத்தம் மக்கள் மத்தியில் காணப்பட்ட முரண்பாடுகளை இல்லாமல் செய்வதற்காகவே கொண்டு வரப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சி இதனைக் கொண்டுவரும் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் தலைமைத்துவத்தின் கீழ் இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் எதிர்ப்பு தெரிவித்து ஆர்பாட்டத்திலும்

## பெயர் மாற்றம்

வல்லிபுரம், புலோலி எனும் முகவரியில் வசித்து வரும் **செல்வராசா மன்மதன்** ஆகிய நான் அறியத் தருவது யாதெனில் எனது சகல ஆவணங்களிலும் பதிவிடப்பட்டுள்ள **செல்வராசா மன்மதன்** என்ற எனது பெயரினை இன்று முதல் சகல ஆவணங்களிலும் **செல்வராசா சாகித்தியன்** என மாற்றிக்கொள்வதோடு, சகல ஆவணங்களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என தெரிவித்து கொள்கின்றேன்.

## வேலையாள்கள் தேவை

கோண்டாவில் பகுதியில் இயங்கும்
**தையல் நிலையத்துக்கு**
**நன்கு தைக்கத்தெரிந்த** அல்லது **ஓரளவு தைக்கத்தெரிந்த பெண்கள்**
வேலைக்குத் தேவை.
(தையல் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு)

076 164 0401

## Vacancy for Jaffna Cooks

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஹொட்டல் ஒன்றுக்கு யாழ்ப்பாணச் சுவையில் உணவு சமைக்கக் கூடிய ஆண்/பெண் cooks தேவை.

தொடர்பு

0707 414 356, 0707 416 951

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் - 03 அம்மன் கோவில் வீதியில் உள்ள 22 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சின்னர் வேலுப்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது. F 259/85ம் தோம்பு அறிக்கையின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை ஆறுமுகம் வேலுப்பிள்ளை பிரசித்த நொத் தாரிசு மு. துரைசிங்கம் முகதாவில் 19.12.1956 ஆம் திகதியிடப்பட்ட 8559 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதி மூலம் கார்த்திகேசு செல்லையா விற்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

பின்னர் சாவகச்சேரி வடக்கு கார்த்திகேசு செல்லையாவினால் 23.09.1963 ஆம் திகதியிடப்பட்ட 4211 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய ஈட்டு அறுதி மூலம் வாரித்தம்பி கைம்பெண் செல்லம்மாவிற்கு ஈடு வைக் கப்பட்டுள்ளது. ஈடு இரத்து செய்ததற்கான ஆதாரம் எதுவும் விண்ணப்பதாரியிடம் இல்லை.

பின்னர் சாவகச்சேரி வடக்கு கார்த்திகேசு செல்லையாவினால் பிரசித்த நொத் தாரிசு வீ. பொ. கார்த்திகேசு முகதாவில் 19.07.1976 ஆம் திகதியி டப்பட்ட 3476ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி மூலம் செல்லையா கனகசபைக்கும் செல்லையா கந்தசாமிக்கும் சமமானதாக சேர வேண்டும் மென்று அறுதி எழுதப்பட்டுள்ளது. தோம்பறிக்கையில் இவ் அறுதி பதியப்பட்டதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. காணிப்பதிவகத்தில் F பிரிவு 382 ஆம் இலக்க காணிப் புத்தகம் தொலைந்து விட்டதற்கான ஆதாரம் காணிப்பதிவகத்தினால் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரியிடம் அவ் உறுதி கைவசம் உள்ளது.

பின்னர் சாவகச்சேரி வடக்கு மீசாலை செல்லையா கனகசபையும் பெண் இராசேஸ்வரியும் வங்களாவடி மீசாலை செல்லையா கந்தசாமியும் பிரசித்த நொத்தாரிசு செ. கணபதிப்பிள்ளை முகதாவில் 31.10.2004 ஆம் திகதியி டப்பட்ட 1110 இலக்கத்தில் நிறைவேறிய சீதனம் மூலம் ஞானகுமார் பெண் விஜயரூபிக்கு சீதனமாக கொடுக்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோயிற் பற்று சாவகச்சேரி இறை குடியிருந்த வளவும் பாலியாவளவும் நிலப்பரப்பு 7 3/8 இதில் தெற்குப் பக்கமாக நிலப்பரப்பு 2 1/4 இதை நில அளவையாளர் கே. கனகசபை அவர்களால் 30.10.2020 அன்று வரையப்பட்ட 849/02ஆம் இலக்கப் படத்தின் படியும் ஆட்சிப்படியும் நிலப்பரப்பு மூன்று தசம் அறுபத் தொன்று. (நிலப்பரப்பு 3.61) இதற்கு எல்லைகள்

**கிழக்கு றோட்**
**வடக்கு கார்த்திகேசு செல்லையாவுக்குரிய ஆதனம்**
**மேற்கு அருணகிரி பெண் சரஸ்வதிக்குரிய ஆதனம்**
**தெற்கு வீரவாகு புஸ்பராணிக்குரிய ஆதனம்**

தற்போது ஞானகுமார் பெண் விஜயரூபி இவ் ஆதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களாயின் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற் குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப்பதிலாக விண்ணப்பதாரி பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்
நகராட்சி மன்றம் சாவகச்சேரி.
2020.08.27

# சட்டவிரோதசெயலில் ஈடுபட்ட 4 பேர் கைது

கிளிநொச்சி, செப்.1

கிளிநொச்சியில் சட்டவிரோதசெயலில் ஈடுபட்ட நான்கு பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்லாறு மயில்வாகனபுரம் பகுதியில் மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்களும், இராமநாதபுரம் பகுதியில் 6 லீற்றர் கசிப்புடன் ஒருவரும், கல்மடுநகர் பகுதியில் 20 லீற்றர் கசிப்புடன் ஒருவரும் இவ்வாறு தர்மபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட அனைவரையும் பொலிஸ் பிணையில் விடுவிக்க நடவடிககை எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-113)

# நடவடிக்கைககளே மிகவும் முக்கியம்

## அமெரிக்கா சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.1

காணாமல்போனோரின் குடும்பங்களுக்கான பதிலைப் பெற்றுக்கொடுப்பதற்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானவையாகும் என்று சுட்டிக்காட்டியிருக்கும் அமெரிக்கா, அத்தகைய கட்டமைப்புக்களை வலுப்படுத்துவது அவசியம் என்றும் வலியுறுத்தியிருக்கிறது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சர்வதேச காணாமல் போனோர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நிலையில், இலங்கையில் காணாமல்போனோரின் உறவினர்களுடனான தமது ஒருமைப்பாட்டை இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கர் வெளிப்படுத்தியிருந்தார்.

அதைச் சுட்டிக்காட்டி தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவொன்றிலேயே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

வலிந்து காணாமலாக்கப்படும் சம்பவங்களை முடிவிற்குக் கொண்டு வருவது மாத்திரம் போதுமானதல்ல. மாறாக தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகக் காத்திருக்கும் குடும்பங்களுக்குப் பதில் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கும் அமெரிக்கத் தூதுவர், இந்தக் குடும்பங்களை முன்நிறுத்தி காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தற்போதும் எதிர்காலத்திலும் மிகவும் முக்கியமானவையாகும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதேவேளை, காணாமல்போனோரின் அறியப்படாத தலைவிதியை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவதற்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் போன்ற கட்டமைப்புக்களை மேலும் வலுப்படுத்துவது அவசியமாகும் என்று இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் ரன்ஜா கொக்ரிஜ்ப் வலியுறுத்தியிருக்கிறார். (எ)

## ஜனநாயகம்...

மில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தத்தால்தான் கடந்த ஆட்சியில் நாடு ஜனநாயக வழியில் பயணித்தது. இடையே நடந்த சதிப்புரட்சியால் 52 நாள்கள் தளம்பல் ஏற்பட்டது. எனினும், உயர்நீதிமன்றம் அந்தத் தளம்பல் நிலைக்கு முடிவு கட்டியது.

புதிய அரசும் ஜனநாயக வழியில் பயணிக்க வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம். 19ஆவது திருத்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நாம் விரும்பவில்லை.

அரசியல் தீர்வுக்கும் அபிவிருத்திக்கும் வழிவகுக்கும் புதிய அரசமைப்பையேநாம்விரும்புகின்றோம். அதை இந்த அரசு உடன் கொண்டுவர வேண்டும்- என்றார். (எ-22)

## வரிப்பணத்தை...

**ரூ. 20 லட்சம்**

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் 'இணைத்' தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இரண்டு விசாலமான அறைகளையும், ஓர் கூட்ட மண்டபத்தையும் தனது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்துக்குப் பிடித்துள்ளார். அதில் 16ஆம் இலக்க அறைக்கு வர்ணம் பூசுவது, சொகுசு தளபாடங்கள் வாங்குவது என்பன உள்ளிட்ட திருத்த வேலைகளுக்கரக மாத்திரம் 20 லட்சம் ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளது.

இதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் எதுவும் கொழும்பு அரசிடமிருந்து விடுவிக்கப்படவில்லை. மாவட்டச் செயலக பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்தே இந்தச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதுடன் அதற்கான ஒதுக்கீடும் தற்போது இல்லாத நிலையிலேயே இவை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**700 பேர் அழைப்பு**

**கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரத் துறையினர் அறிவுறுத்தி வருகின்ற நிலையிலும், அதற்குரிய கட்டுப்பாடுகளை மீறி இன்றைய நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.** ஒரே நேரத்தில் 300 பேர் வரையில் மாத்திரமே மாவட்டச் செயலகத்தில் ஆகக் குறைந்த சமூக இடைவெளியுடன் கூடலாம் என்ற நிலையில் 700 பேரை இன்றைய திறப்பு விழாவுக்காக அழைத்துள்ளனர். அவர்களில் சுமார் 150 அலுவலர்களும் ஏனையோர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜனின் ஆதரவாளர்களுமாவர்.

இவர்களுக்கான சிற்றுண்டிக்காக மாத்திரம் 85 ஆயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு, சிங்களப் பாரம்பரிய உணவான கிரிபத் உள்ளிட்ட பல்வேறு பலகாரங்கள் வழங்கப்பட உள்ளன.

இன்றைய திறப்பு விழாவுக்கு மற்றொரு இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளபோதும் அவர்கலந்து கொள்ளமாட்டார் என்று அறியமுடிகின்றது.

**அவமரியாதைப்படுத்தப்பட்ட அதிகாரிகள்**

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் செயலர் என்று அறிமுகப்படுத்தும் சிவராம், அங்கஜனின் சித்தப்பாவான ராஜன், அங்கஜனின் தம்பி ஆகியோர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுக் காலை நேரில் சென்றுள்ளனர். மாவட்டச் செயலரின் அறையில் வைத்து மாவட்டச் செயலர் முன்பாகவே, மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரிகள் பலரை அவமானப்படுத்தும் வகையில், தரக்குறைவாகப் பேசியுள்ளனர்.

அத்துடன் அவர்களின் பணிப்புக்கு அமைவாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இயங்கிய மீள்குடியேற்றக் கிளையின் அறையும் நேற்றைய தினம் ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத்துக்குப் பிடிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## இன்றைய...

அதிகாரிகளுக்கு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் கடிதம் அனுப்பியுள்ளார். இன்று நடைபெறும் நிகழ்வுக்கு, எதிர்வரும் 29ஆம் (29.09.2020) திகதியிடப்பட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**கடிதம் ஒன்றைக் கூட ஒழுங்காக அனுப்ப முடியாதளவுக்கா மாவட்டச் செயலரின் நிர்வாகத் திறமை இருக்கின்றது? என்று அரச அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ள**

## சந்நிதி...

றைகளைப் பின்பற்றிப் பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

நாளை புதன்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும், மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (எ173,26)

## கணவரால்...

அவரது கணவர் நேற்று பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த ரூபிகா (வயது 22) என்பவரே உயிரிழந்துள்ளார்.


இவர் கடந்த 4ஆம் திகதி எரிகாயங்களுடன் மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். குடும்பத் தகராறு காரணமாக இவரது கணவர் இவருக்குத் தீ வைத்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த 27 நாள்களாகச் சிகிச்சை பெற்றுவந்த இவர், நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அதையடுத்து அவரது கணவர் நேற்றுப் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

உயிரிழந்தவரின் உடல் உடல் கூற்றுப் பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-26)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 |  | 31 |
| 12 | | 08 |
| 1941 | | 2020 |

## இராசையா புலேந்திரன்

(ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர், காகிதக் கூட்டுத்தாபனம்- வாழைச்சேனை)

யாழ். திருநெல்வேலி கிழக்கு முடமாவடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா புலேந்திரன் நேற்று (31.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா-அன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற தவமலர் மற்றும் புனிதமலர், மகாலட்சுமி, ஜெயலட்சுமி, சறோஜா, சுதாமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கவிதா (UK), அரவிந்தன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமார், தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சியாகன் மற்றும் கவிசன், அக்ஷியா ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பி.ப 1 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொர்புக்கு:மகன் அரவிந்தன்
0044 7533 795882

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 | 31 |
| 09 | 08 |
| 1947 | 2020 |

## திருமதி முருகுப்பிள்ளை நாகம்மா

காந்தியூர் புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும், கார்த்திகேயர் வீதி, புலோலி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகுப்பிள்ளை நாகம்மா நேற்று (31.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சதீஸ்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர், காணி உரித்து நிர்ணய திணைக்களம், யாழ்ப் பாணம்), சிவராணி (ஆசிரியர், யா/வடமாராட்சி இந்து மகளீர் கல்லூரி), சிவ குமார் (கனடா), நளாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி (ஆசிரியர், யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை), அரியதாஸ் (ஆசிரியர், யா/தேவரயாளி இந்துக் கல்லூரி), லங்கநாதன் (பிரான்ஸ்), சிந்துஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜதுர்சன், அபிசாந், ஹரிகரன், ஹரிஸ் சானியா, சாருஜன், சர்மிளன், சாருகா, ஆரபி, மிதுரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2020) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கார்த்திகேசர் வீதி,**
**புலோலி மேற்கு, புலோலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 6154 171**

# வீடு மீது கல் வீச்சு

கொடிகாமம், செப் 1

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றிரவு 7 மணியளவில் வீடொன்றின் மீது கல் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. சுமார் பத்து மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 23 | 18 |
| 11 | 08 |
| 2005 | 2020 |

## பிரணவன் நவநேசன்


லண்டனை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பிரணவன் நவநேசன் கடந்த (18.08.2020) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் நவநேசன்-நந்தினி தம்பதியரின் அன்பு மகனும், பூமிகாவின் பாச மிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-இராசம்மா (அரி யாலை) தம்பதியினர் மற்றும் செல்வராசா-பூபதி தம்பதியினரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2020) புதன்கிழமை 49, Hatsbury Road, West Northolt Ub-5-4PN-UK இல் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக Whicldem Ln, Amersham HP-7 OND.UK இக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர் கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ரவி பாமினி (பெரியப்பா-பெரியம்மா)**
**122, நாவலடி, அரியாலை.**
**கலாதரன்-புஸ்பலதா (மாமன்-அத்தை)**
**இளையதம்பி வீதி, அரியாலை.**

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 28 |
| 01 | 08 |
| 1939 | 2020 |

## திருமதி பாலசுந்தரம் பரமேஸ்வரி

(ஓய்வுநிலை ஆசிரியை , வரணி மகா வித்தியாலயம்)

யாழ் .கொடிகாமம், கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton Ontario வை வதி விடமாகவும் கொண்ட பரமேஸ்வரி பாலசுந்தரம் 28. 08. 2020 வெள்ளிக்கிழமை அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா பாலசுந்தரம் (அல்வாய்) (முன்னாள் அரச உத்தி யோகத்தர் பொலிஸ் திணைக்களம் ) அவர்களின் அன்பு மனைவியும், பாலசோதி (ஜேர்மனி ), சோதீஸ்வரன் (லண்டன்), பாலேஸ்வரி (கனடா) .விக்னேஸ்வரன் (கனடா) , இராஜேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், அமிர்தலிங்கம், தேவகி, நந்தகுமார், கலைச்செல்வி, விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் திருச்செல்வம் (பொறியியலாளர்), மகேஸ்வரி, நகுலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யாழினி, பிரசாந், கஜன், தனுசியா, தூரிகா, வித்தகன், ராகவி, சாருஜன், ஜெனுசன், பிராமி, அக்ஷன், அஸ்மிதன், ஷரேயன், ஆரலன், அகர்யன், கேநீலன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வேதிகாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2020) புதன்கிழமை கனடா நேரப்படி 10.00am - 12.00 am மணியளவில் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8199 Wood Bine Avenue Markam Ontario L3R 5G1இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

தொடர்புகட்கு :

| | | | |
|---|---|---|---|
| பாலேஸ்வரி | (சோமா) | கனடா | : 1647 546 1646 |
| விக்னேஸ்வரன் | (கரன்) | கனடா | : 1416 988 6607 |
| இராஜேஸ்வரன் | (றோகன்) | கனடா | : 1647 528 4209 |
| பாலசோதி | (பாப்பா) | ஜேர்மனி | : 4923 397 4123 |
| சோதீஸ்வரன் | (மோகன்) | லண்டன் | : 4478 496 59399 |
| திருச்செல்வம் | | கனடா | : 1 416 317 3339 |
| நகுலேஸ்வரி | இலங்கை | | : +94 7645 80640 |
| மகேஸ்வரி | இலங்கை | | : +94 7789 35079 |

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 31 |
| 03 | 08 |
| 1955 | 2020 |

## சண்முகரட்ணம் பிறேம்குமார்

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி வடமாகாண பிராந்திய முகாமையாளரும், கொக்குவில் கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமி கோவில் பொருளாளரும்)

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும், இலக்கம் 02, கல்லூரி வீதியில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான சண்முகரட்ணம் பிறேம்குமார் நேற்று (31.08.2020) திங்கட்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகரட்ணம் ஜெகஜோதி தம்பதியரின் சிரேஸ்ட புத்திர னும், செல்வராசா செல்லம்மா தம்பதியரின் அருமை மருமகனும், ராதாமணியின் அன்புக் கணவரும், அர்ச்சனா, கிருபாகரன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தை யும், பிறேமானந், பிறிஸ்ஸில்லா ஆகியோரின் அன்பு மாமனாரும், கனிஸ்க்கா, பிறித் திக்கா, ஜெய் மதூஷன் ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற பிறேமசுதன் (Swiss) மற்றும் பிறேமமோகன் (Swiss), பிறேமஜெகன் (Swiss) பிறேமதர்சினி (Canada), பிறேமலோசினி (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வசந்தி, சாந்தி, பவானி, கமலநாதன், ஈசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கணே சமூர்த்தி (Swiss), கணேசராஜா (USA), கண்ணதாசன் (Swiss), கருணாகரன் (U.K), கருணதாஸ் (Canada) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இந்தி ராணி, ஜெயலக்ஷ்மி, மதுராகினி, கேணம், வவா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.09.2020) புதன்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள். அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இலக்கம்-02, கல்லூரி வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

**072 6183 141**

## இடமளியோம்...

20ஆவது திருத்தத்தை அரசு நிறைவேற்ற அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம். அதைவிடுத்து எமது அனுமதியின்றி 19ஆவது திருத்தத்தில் எதிர்மறையான திருத்தங்களை அரசு செய்யவோ அல்லது அதை முற்றாக இல்லாதொழிக்கவோ நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக் காலமும், நாடாளுமன்றத்தின் பதவிக் காலமும் 5 வருடங்களாக இருக்கவேண்டும். அதேவேளை, ஒருவர் ஜனாதிபதியாக இரண்டு தடவைகள் மாத்திரமே பதவி வகிக்க முடியும். இந்த வரையறைகளில் மாற்றம் வரக்கூடாது.

அதேவேளை, அரசமைப்பு பேரவை, சுயாதீனக்குழுக்கள் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

நிறைவேற்றுத்துறை, சட்டவாக்கத்துறை ஆகியவற்றுக்குக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிலும் மாற்றம் கொண்டுவர முடியாது.

இரட்டைப் பிரஜாவுரிமையுடைய ஒருவர் இந்த நாட்டில் நடைபெறும் எந்தத் தேர்தல்களிலும் போட்டியிட முடியாது என்ற விதிமுறையிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

அதாவது ராஜபக்சக்களின் சுகபோக அரசியலை மையப்படுத்தி 19ஆவது திருத்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவோ அல்லது அதை இல்லாதொழிக்கவோ நாம் இடமளிக்கமாட்டோம்- என்றார். (எ-22)

## இலங்கை...

தம நாடாளுமன்றில்நிறைவேற்றப்பட்டது. அந்தத் திருத்தத்தை இல்லாதொழித்து நாட்டை நாசமாக்கும் ராஜபக்சக்களின் திட்டத்துக்கு ஆளுந்தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இடமளிக்கக்கூடாது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முற்றாக வலுவிழக்கச் செய்யும் வகையில் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றும் வேலைத்திட்டத்தில் ராஜபக்சக்கள் களமிறங்கியுள்ளனர்.

குடும்ப அரசியல், எதேச்சதிகாரம் ஆகியவற்றின் ஊடாக நாட்டை ஆட்சி செய்யும் நோக்குடனேயே ஜனாதிபதியும், பிரதமரும் கங்கணம் கட்டிச் செயற்படுகின்றனர்.

இந்தக் கேவலமான நடவடிக்கைகளுக்கு நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்றுள்ள எவரும் ஆதரவு வழங்கக்கூடாது. இது எனது அன்பான வேண்டுகோளாகும்என்றார். (எ22)

## ராஜபக்ச...

யும் நாட்டு மக்களையும் நேசிக்கும் எவரும் ஆதரவு வழங்கக்கூடாது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தலில் நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்பியிருக்கலாம். ஆனால், அவர்கள் குடும்ப ஆட்சியையும், சர்வாதிகார ஆட்சியையும் ஒருபோதும் விரும்பவில்லை.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கவே நாட்டு மக்கள் தமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்று ராஜபக்சவினர் பொய்யுரைக்கின்றனர். இதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை.

19ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க ஆதரவு வழங்கினால் அது ராஜபக்சக்களின் மன்னர் ஆட்சிக்கே வழிவகுக்கும். எனவே, இதை உணர்ந்து மக்கள் பிரதிநிதிகள் செயற்பட வேண்டும்என்றார். (எ-22)

## விக்கி...

தலைவர் விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்யவேண்டும் என்று நவ சிங்கள ராவய அமைப்பின் பொதுச்செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரசியல் இலாபத்துக்காக இனவாதத்தை தூண்டும் நடவடிக்கையில் விக்னேஸ்வரன் ஈடுபட்டுள்ளார். அவரின் இந்த முயற்சியை தோற்கடிப்பதற்கு அனைத்து மக்களும் ஓரணியில் திரள வேண்டும்.

அதுமட்டுமல்ல விக்னேஸ்வரனை உடனடியாக கைது செய்து, வாக்குமூலம் பதிவுசெய்யவேண்டும். நாடாளுமன்றத்துக்குள் மட்டுமல்ல வெளியிலும் அவர் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிடுகின்றார்.

புலிகளின் பிரிவினைவாத முகாமையே அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அவரின் அறிவிப்புகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். என்றார்.

அதேவேளை, இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிங்கலே அமைப்பின் பொதுச்செயலாளர், "தமிழ், சிங்கள மக்களுக்கிடையில் உள்ள நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கும் முகவராக விக்னேஸ்வரன் செயற்படுகின்றார்." என்று குற்றஞ்சாட்டினார். (எ44)

## அமைச்சர்களுடன்...

சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஒருங்கிணைப்பு 'இணைத்' தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களுடனான ஜனாதிபதியின் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அமைச்சர்கள் தேசிய ரீதியான பிரச்சினைகளைக் கையாள்வார்கள். மாவட்ட ஒருங்கிணைப்பு 'இணைத்' தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள், மாவட்ட ரீதியான பிரச்சினைகளைக் கையாள்வார்கள். எனவே அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுடன் இணைந்து மாவட்ட ஒருங்கிணைப்பு 'இணைத்' தலைவர்கள் பணியாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி பணித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு 'இணைத்' தலைவராக நியமிக்கப்பட்ட அங்கஜன் இராமநாதன், அமைச்சர்கள் அல்லது அமைச்சுக்கள் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தனது அனுசரணையுடன்மாத்திரமேநடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தனது அனுமதியில்லாமல் மாவட்டச் செயலர் அல்லது பிரதேச செயலருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று மாவட்டச் செயலருக்கு கடிதம் அனுப்பியிருந்த நிலையிலேயே, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஒ,5)

## அங்கஜனுக்கு...

டங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு 'இணைத்' தலைவர்களுடனான கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 4 மணிக்கு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற தென்பகுதியைச் சேர்ந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர்கள் சிலர், தமக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கான அலுவலகம் இல்லை, தளபாடங்கள் இல்லை, வாகனங்கள் இல்லை என்று தெரிவித்தனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த பஸில் ராஜபக்ச, நீங்கள் ஒருங்கிணைப்புக்குழுவுக்கான அலுவலகம் இல்லை என்கின்றீர்கள். ஆனால் இங்குள்ள சிலர் ஒன்றுக்கு மூன்று அலுவலகங்களை தமது ஒருங்கிணைப்புக்குழுவுக்காக பிடித்துள்ளார்கள். அவ்வாறு மூன்று அலுவலகங்களைப் பிடிக்கவேண்டாம் என்று கூறியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 'இணைத்' தலைவரான அங்கஜன் இராமநாதன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மூன்று அலுவலகங்களை தனது ஒருங்கிணைப்புக் குழுவின் அலுவலகமாக மாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## சர்வதிகாரம்...

ழிக்க ராஜபக்ச அரசு முயற்சிக்கின்றது.

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தத்தை நீக்க நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அந்தத் திருத்தச் சட்டத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

கடந்த ஆட்சியில் 19ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை நாட்டின் ஜனநாயகத்துக்கும் மக்களின் உரிமைக்கும் கிடைத்த பெரும் வெற்றியாகும்.

ராஜபக்சக்களின் ஏகாதிபத்தியத்துக்கு வழிவகுத்த 18ஆவது திருத்தத்தை 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் இல்லாதொழித்தோம்.

18ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட வரையறையில்லாத அதிகாரங்களை 19ஆவது திருத்தத்தின் மூலம் குறைத்தோம்.

தற்போது ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் கோட்டாபய ராஜபக்ச தனக்கான அதிகாரங்களைப் பெருக்கிக்கொள்ள 19ஆவது திருத்தத்துக்கு முடிவுகட்டத் தீர்மானித்துள்ளார். இதற்கு அவரின் சகோதரர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளார். எனவே, ராஜபக்ச சகோதரர்களுக்காக 19ஆவது திருத்தத்தை நீக்க இடமளிக்க மாட்டோம். மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்-என்றார். (எ-22)

## பிரணாப்...

லக்குறைவால் நேற்றுக் காலமானார். புதுடில்லி ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அவருக்கு வயது 84.

முன்னாள் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜிக்கு மூளையில் சிறிய கட்டி இருந்ததால், அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவதற்காக புதுடில்லியிலுள்ள இராணுவ ஆராய்ச்சி மருத்துவமனையில் கடந்த 10ஆம் திகதி சேர்க்கப்பட்டார். அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவருக்கு கொரோனா தொற்றுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

பிரணாப் முகர்ஜியின் மூளையில் இருந்த சிறிய கட்டி அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டபின்பு அவர் கோமா நிலையில் இருந்தார். நாளடைவில் அவரின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமானது. அவர் ஆழ்ந்த கோமா நிலைக்கு சென்றுவிட்டார் என்றும், அவரது சிறுநீரக செயல்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் மருத்துவர்கள் தெரிவித்திருந்தனர்.

நேற்று மாலை அவரது மகன் அபிஜித் முகர்ஜி தனது டுவீற்றர் பக்கத்தில் பிரணாப் முகர்ஜி காலமான செய்தியை பதிவிட்டார். "மிகுந்த கனத்த இதயத்துடன் உங்களுக்கு அறிவிக்கிறேன். என்னுடைய தந்தை பிரணாப் முகர்ஜி சிறிது நேரத்துக்கு முன் காலமானார். ஆர்ஆர் மருத்துவமனை மருத்துவர்கள் தீவிரமான சிகிச்சை அளித்தும், நாடுமுழுவதும் மக்களின் பிரார்த்தனைகள், துவாக்கள், வேண்டுதல்கள் இருந்தும் அவர் காலமானார். அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்" என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

2012ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டுவரை இந்தியாவின் குடியரசுத் தலைவராக இருந்தவர் பிரணாப் முகர்ஜி. காங்கிரஸ் ஆட்சியின்போது நிதியமைச்சராகவும், பாதுகாப்புத்துறை அமைச்சராகவும், வெளியுறவுத்துறை அமைச்சராகவும், திட்டக்குழு துணைத் தலைவராகவும் பிரணாப் முகர்ஜி இருந்துள்ளார்.

2008ஆம் ஆண்டு பிரணாப் முகர்ஜிக்கு பத்ம விபூஷன் விருது வழங்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு அந்த நாட்டின் உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதை பிரணாப் முகர்ஜி வழங்கிக் கௌரவப்படுத்தியது. (எ)

## 19 இற்கு...

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்களை அரசியலில் இருந்து ஒதுக்கும் வகையிலேயே அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசு நிறைவேற்றியிருந்தது. இதுதான் உண்மை நிலைவரம்.

இந்தத் திருத்தத்தால் நாடோ அல்லது மக்களோ எவ்வித நன்மையும் அடையவில்லை. மாறாக கடந்த நான்கரை வருடங்களாக நாட்டு மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்தார்கள். ஊழல், மோசடிகள் தலைவிரித்தாடி நாட்டின் பொருளாதாரம் அதள பாதாளத்துக்குச் சென்றிருந்தது.

இந்த அவலநிலைக்கு முடிவுகட்டவே நாட்டு மக்கள் எமது கையில் மீண்டும் அதிகாரத்தைத் தந்துள்ளார்கள். எனவே, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் காலங்களில் நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிக்கமைய அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு முடிவு கட்டியே தீருவோம். இந்த நிலைப்பாட்டில் ஜனாதிபதியும் உறுதியாக உள்ளார். அவர் தனது கொள்கை விளக்க உரையில் இதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்என்றார். (எ22)

# ஐயப்பன் தரிசனம் நவம்பர் தொடக்கம்

சபரிமலை ஐயப்பன் கோவிலில் நவம்பர் முதல் சுகாதார நடைமுறைகளுடன் பக்தர்களை அனுமதிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது எனத் திருவிதாங்கூர் தேவஸ்தான சங்கம் தெரிவித்துள்ளது. ஓணம் பண்டிகை மற்றும் உத்தராடம், திருவோண சிறப்பு பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகிறது. அத்தோடு, செப்டெம்பர் 2ஆம் திகதி வரை பக்தர்கள் தரிசனமின்றி வழக்கமான பூஜைகள் நடைபெறும் எனவும் அறிவித்துள்ளது. இந்நிலையில் நவம்பர் 16 இல் ஆரம்பமாகும் மண்டல பூஜைக்காலம் முதல் சபரிமலையில் விதிமுறைகளுடன் பக்தர்களை அனுமதிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனத் திருவிதாங்கூர் தேவஸ்தான சங்கம் தெரிவித்துள்ளது. (வ)

# காணாமல் போனோர் தினத்தில் பாக். அரசுக்கு எதிராக போராட்டம்

**சர்வதேச காணாமல் போனவர்களின் தினத்தை முன்னிட்டு பாகிஸ்தான் அரசுக்கு எதிராக பிரிட்டனில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**






பிரதமர் போரிஸ் ஜோன்சனின் அலுவலக இல்லத்திற்கு வெளியே நடத்தப்பட்ட இந்த போராட்டத்தில் பலர் பங்கேற்றனர். இதேபோல், லண்டனில் உள்ள பாராளுமன்றத்தின் முன்பு சிந்தி பலூச் மன்றம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பங்கேற்றவர்கள் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக கோஷமிட்டனர். நியூயோர்க்கில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்திற்கு வெளியே பாகிஸ்தானைச் சேர்ந்த சிறுபான்மை சமூகங்களின் உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர். சிறுபான்மையினருக்கு எதிராக பாகிஸ்தான் அரசின் ஒடுக்குமுறை மற்றும் அட்டூழியங்களைக் கண்டித்து அவர்கள் கோஷங்களை எழுப்பினர். பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்றும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (வ)

வெளிச்சத்துக்கு வந்த சவூதியின் முகம்

# அடிப்படை வசதிகளின்றி ஆபிரிக்க அகதிகள்

ரியாத், செப்.1

ஆபிரிக்காவிலிருந்து சவூதி அரேபியாவுக்குப் புலம்பெயர்ந்தவர்களைத் தனியான இடமொன்றில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி அடைத்து வைத்திருப்பது தெரியவந்துள்ளது. கொரோனாப் பரவுவதைத் தடுக்கும் வகையிலே ஆயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோரை இவ்வாறு சவூதி அரசாங்கம் அடைத்து வைத்திருப்பது தெரியவந்துள்ளது.

சவூதி கொரோனாத் தடுப்பு மையங்களுக்குள் அடைக்கப்பட்டுள்ளவர்களின் புகைப்படங்கள் வெளியாகியதையடுத்து அவர்களின் நிலை தொடர்பில் தெரியவந்துள்ளது. அரேபிய வெப்பத்தால் முடங்கிப்போன நூற்றுக்கணக்கான ஆண்கள், மூடப்பட்ட ஜன்னல்கள் கொண்ட சிறிய அறைகளில் இறுக்கமாக வரிசைகளில் கிடப்பதை அப் புகைப்படங்கள் காண்பிக்கின்றன. (வ)





# கார்களில் பார்வையாளர்கள்; வித்தியாசமான இசை நிகழ்ச்சி


இந்தோனேசியத் தலைநகர் ஜக்கர்த்தாவில் கொரோனாப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பேணும் வகையில் வித்தியாசமான இசை நிகழ்ச்சியொன்று இடம்பெற்றுள்ளது. அந்நாட்டின் பிரபல இசைக்குழு காஹிட்னா நடாத்திய இசை நிகழ்ச்சியில் சுமார் 300 கார்களில் 900 பேர் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சியில் முழுப் பாதுகாப்புடன் இசையை ரசிக்கும் வாய்ப்பு பார்வையாளர்களுக்கு கிடைத்துள்ளது. நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள் உட்செல்ல முன் தமக்கு கொரோனா இல்லை என்பதற்கான பரிசோதனை அறிக்கைகளை காண்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# உருண்டோடியது பிரதமரின் தலை

ஒட்டாவா, செப்.1

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல பழங்குடியின மக்களைக் கொன்ற கொடூரமான கொள்கைகளுடன் தொடர்புடைய கனடாவின் முதல் பிரதமர் ஜோன் மெக்டொனால்டின் சிலையை ஆர்ப்பாட்டக்காரர்களால் கவிழ்த்து விழுத்தப்பட்டுள்ளது.

கறுப்பு இனத்தவர்களுக்கு ஆதரவாக பல நாடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களுக்கிடையே கனடாவின் மாண்ட்ரீல் அமைந்துள்ள ஜோன் மெக்டொனால்டின் சிலையானது சனிக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்களினால் கவிழ்க்கப்பட்டுள்ளது. ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலையைக் கட்டி இழுக்கும்போது, சிலை கவிழ்ந்து வீழ்ந்து, அதன் தலைப் பாகம் நடைபாதையில் உருண்டோடியுள்ளது. (வ)



# போர்க்களமாக மாறியது போராட்டக்களம்



*ஒருவர் சாவு; பலர் படுகாயம்*

வொஷிங்டன், செப். 1

அமெரிக்காவின் போர்ட்லாந்தில் கறுப்பின மக்கள் மீதான வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடம்பெறும் போராட்டங்களில் போராட்டக்காரர்களுக்கும், டிரம்ப் ஆதரவாளர்களுக்கும் இடையே நடந்த வன்முறையில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்தனர். அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில் உள்ள கனோஷா என்ற இடத்தில் ஜாகொப் பிளேக் என்ற கறுப்பின இளைஞர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தார். இதையடுத்துக் கறுப்பின மக்களுக்கு ஆதரவான போராட்டஙயகள் மேலும் தீவிரமாகி வருகின்றன. இந் நிலையில் பிளோய்ட்டின் கொலைக்கு எதிராக கடந்த 3 மாதங்களாக போர்ட்லாந்தில் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. நேற்று முன்தினம் ட்ரம்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் குழப்பம் விளைவித்ததையடுத்து வன்முறையாக மாறியது. அதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். [illegible] (வ)

# டோனி - ரெய்னா கருத்து மோதலா?



**புதுடெல்லி, செப்.1**
**சென்னை சுப்பர் கிங்ஸில் இருந்து ரெய்னா விலகி நாடு திரும்பியதற்கு அவருக்கும் டோனிக்கும்இடையிலானமனக்கசப்புத்தான் காரணம் என்று தெரியவருகின்றது.**

இந்தியாவில் கொரோனாத் தொற்று உச்சம்பெற்றுள்ளதை அடுத்து இந்த வருட ஐ.பி.எல் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற வுள்ளது.

இந்தத் தொடருக்காக அனைத்து அணிகளும் அங்கு முகாமிட்டுள்ளன. இந்தத் தொடருக்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முன்னதாகப் பயிற்சி முகாமொன்றை சென்னையில் நடத்தியது. இந்தப் பயிற்சிமுகாம்மூலம் வீரர்களுக்குக் கொரோனா பரவும் அபாயம் உள்ளது என்றும், அதைத் தவிர்க்கும்படியும் ரெய்னா கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் டோனியின் விருப்பப்படி முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் பங்கேற்ற சென்னை வீரர்கள் உள்ளிட்ட 13 பேருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே ரெய்னாவுக்கும் சென்னை நிர்வாகத்துக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது என்று சொல்லப்படுகின்றது. டோனியும் ரெய்னாவிடம் சிறிது பிடிவாதத்துடன் நடந்து கொண்டதை அடுத்தே ரெய்னா ஐ.பி.எல் தொடரில் இருந்து விலகினார் என்று தகவல் வெளியாகியுள்ளது. (ம)



## புதிய பயிற்சியாளராக லாஸ்லோ

புதுடில்லி, செப்.1
இந்தியன் சூப்பர் லீக் கால்பந்துப் போட்டியில், சென்னை எவ்.சி. அணியின் புதிய பயிற்சியாளராக லாஸ்லோ நியமிக்கப்பட்டுள்ளார்.

7 ஆவது இந்தியன் சூப்பர் லீக் கால்பந்துப் போட்டி கோவாவில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்கேற்கும் 10 அணிகளில் ஒன்றான சென்னையின் எப்.சி. அணியின் பயிற்சியாளர் ஓவென் கோய்லெ கடந்த சீசனுடன் தமது பதவியிலிருந்து விலகினார்.

இந்த நிலையில் சென்னையின் எவ்.சி. அணியின் புதிய தலைமைப் பயிற்சியாளராக ஹங்கேரியைச் சேர்ந்த சபா லாஸ்லோ நியமிக்கப்பட்டுள்ளார்.

56 வயதான லாஸ்லோ சர்வதேச மற்றும் கழக அணிகளுக்கு 20 ஆண்டுகளுக்கு மேலாக பயிற்சியாளராக இருந்த அனுபவம் வாய்ந்தவர். இவர் உகாண்டா மற்றும் லித்துவேனியா ஆகிய தேசிய அணிகளுக்கு பயிற்சியாளராக இருந்துள்ளார். ஆனால் இவர் ஆசியக் கண்டத்தில் பயிற்சியாளராக செயற்பட இருக்கின்றமை இதுவே முதல் முறையாகும்.

இது குறித்து அவர் கருத்து வெளியிடுகையில்;
சென்னையின் எப்.சி. அணி ஒரு குடும்பம் போன்றது. முடிவு எப்படி அமைந்தாலும் எல்லா நேரமும் ஆதரவு தரும் ரசிகர்களைக் கொண்டது.

இந்தக் குடும்பத்துடன் இணைவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சென்னை அணியைச் சிறந்த நிலைக்கு உயர்த்துவதற்கு உதவி பயிற்சியாளர்களுடன் இணைந்து சகல முயற்சிகளையும் மேற்கொள்வேன்- என்றார். (ற)



## வெற்றி வாகை சூடியது இங்கிலாந்து

லண்டன், செப்.1
இரண்டாவது ரி20 போட்டியில் பாகிஸ்தான் அணியை 5 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றுள்ளது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி, பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 இலக்குகள் இழப்புக்கு 195 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பாகிஸ்தான் அணி சார்பில், பாபர் அசாம் 56 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 69 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இதனையடுத்து, துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 19.1 ஓவர்களில் 5 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கைக் கடந்தது. இங்கிலாந்து அணி சார்பாக, டோவிட் மல்லன் 54 ஓட்டங்களையும், இயன் மோர்கன் 66 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இந்த நிலையில், 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)



வவுனியா மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 24 அணிகளுக்கிடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள், வவுனியா நகரசபை கூடைப்பந்தாட்டத்திடலில் நேற்று இடம்பெற்றது. போட்டியில் முதலாம் இடத்தை அனுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த அணியும், இரண்டாம் இடத்தை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அணியும் பெற்று பணப்பரிசில்களைத் தமதாக்கிக் கொண்டன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, அனுராதபுரம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணிக் கழகங்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டன. (ற-110)



கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியின், இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது. இந்தப் போட்டி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும், அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழ கமும் மோதின. 30 பந்துகள் கொண்ட இந்தச் சுற்றில் முதலில் துடுப்பெடுத்தாடிய அண்ணாசிலையடி அணி 2 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மனோகரா அணி 3 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்து இந்த வருடத்தின் பிரதேச சம்பியனானது. (ற-108)

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
இலவச
கருத்தரங்கு-2020
A/L தொழில்நுட்பபிரிவு
September - 5,6
8.00am - 2.30pm
ஆசிரியர்கள்
○ சக்தி ○ முருகநிரோஜன்
○ ராகவன் ○ லகேவந்திரன்
அனுமதி இலவசம்
(Full model papers - 01)
(50Mcq, 4 Structure and 6 Essay)
077 017 5346, 077 170 3549

வேலையாள்கள் தேவை
மேசன், கம்பிவேலை, சட்டரிங்
வேலை செய்வோர் தேவை
Everythinghere.lk
076 831 0115, 077 247 3883


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.